# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2023 ஜனவரி**

**மலர்:44 இதழ்:01**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

**அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு**

**ஆசிரியர்: ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

**வரைகலை: கார்ட்டூன்வாசி**

**இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178**

**இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி**

**முகவரி:**
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:**
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**


இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...


1. **விடிவுச் செங்கதிர் விரைவினில் தோன்றும்! வெற்றிச் சங்கொலி விண்ணைத் தீண்டும்!**
   *தலைவர் மடல் ................................4*
2. **சேலம் மாநில பிரதிநிதித்துவப் பேரவையின் வெற்றியை தீர்மானிப்போம்**
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து...................................8*
3. **கே( ா )ப்பையில் வழிந்த தேன்!!**..............13
4. **எண்ணிய எண்ணியாங்கு எய்திட, சொன்னதை சொன்னபடி செய்திடுங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களே!**.............16
5. **ஜீவா எனும் மகத்துவம்** ........................18
6. **மாற்றங்கள் விளையாவிட்டால் ஆட்டங்களை மாற்றியமைப்போம்!**...............................21
7. **உரிமை மீட்பு கடமையாற்ற அருமைத் தோழர்களே வருக! வருக!** .....................26
8. **மாநில பிரதிநிதித்துவப் பேரவை அறைகூவல் தீர்மானங்கள்** .....................28
9. **நாம் எதைத் தேடிக்கொண்டிருக்கிறோமோ, அது நம்மை தேடிக்கொண்டிருக்கிறது!**........34

# விடிவுச் செங்கதிர் விரைவினில் தோன்றும்! வெற்றிச் சங்கொலி விண்ணைத் தீண்டும்!

2022 டிசம்பர் 17ஆம் தேதி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சேலத்தில் மூட்டிய பிரதிநிதித்துவப் பேரவையின் தீச்சுவாலையின் உஷ்ணமும், உக்கிரமும் நம்மிடம் வாக்குறுதி கொடுத்து வார்த்தை தவறிய மாண்புகுரியவர்களை தகிப்புக்கு ஆளாக்கியிருக்கிறது என்பது அரசு வெளியிட்டிருக்கும் அகவிலைப்படி உயர்வு அரசாணையின் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஆனால், நம் கோரிக்கையை அகவிலைப்படியோடு அமைதியாகி விடுவதல்ல. இப்போதைக்கு மூட்டியிருப்பது சிறு தீ மட்டும்தான் அது வீதிக்கு வீதி பரவி தலைமைச் செயலகத்தில் தீக்கங்குகளாக விழும் நாளுக்கான கவுண்ட் டவுன் டிசம்பர் 17, 2022 அன்றே தொடங்கிவிட்டது. அதனாலேயே இந்த புத்தாண்டு பூங்கொத்துக்களால் அல்லாமல் உரிமை மீட்பு தீக்கங்குகளால் வரவேற்கப்பட்டுள்ளது.

2021ம் ஆண்டில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசிய பேச்சுக்கள் இன்னும் ஒவ்வொரு அரசு ஊழியர் நெஞ்சிலும் கல்வெட்டுக்களாய் செதுக்கப்பட்டு கிடக்கிறது. அன்றைய முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களைப் பார்த்து ஸ்டாலின் அவர்கள் கேட்ட கேள்விகள் இன்னும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கின்றன.



மற்ற எந்த உரிமையையும் தடுத்து வைக்கலாம் ஆனால் விலைவாசி ஏற்றத்திற்கேற்ப வழங்கப்படும் அகவிலைப்படியையாவது உடனடியாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி அவர்களைக் கேட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் ஆறுமாத காலமாக அதைப்பற்றி வாய்திறக்காமல் இருந்தார். எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது அகவிலைப்படி குறித்து அவருக்கு தெரிந்த நியாய அநியாயங்கள் ஆட்சிப்பொறுப்பேற்று முதல்வரான பிறகு மொத்தமாக மறந்து போய்விட்டது(!) ஆச்சர்யம் மட்டுமல்ல அதிர்ச்சியும் கூடத்தான் நமக்கு. இப்போதும் ஆறுமாதம் அகவிலைப்படியை பிடித்துக் கொண்டுதான் கொடுத்துள்ளார்.

சென்னை மாதவரத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய 14ஆம் மாநில மாநாட்டில் முதல்வர் சொன்ன வார்த்தைகளை முகம் சுளிக்காமல் ஏற்றுக்கொண்டு அமைதியாக வீடு திரும்பியவர்கள்தான் அரசு ஊழியர்கள். தீவுத்திடலிலும், ஜாக்டோ ஜியோவின் வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில், ''உங்கள் கோரிக்கைகள் உயிரோடு இருக்கின்றன.'' என்று உறுதிமொழி அளித்துவிட்டுச் சென்ற மாண்புமிகு முதல்வரின் வார்த்தைகளை தேவ வாக்காக ஒவ்வொரு அரசு ஊழியரும், ஆசிரியரும் ஏற்றுக்கொண்டு நிதி நிலைமை சீராக சீராக நம்முடைய கோரிக்கைகளை முதல்வர் நிச்சயம் தீர்த்துவைப்பார் என்று அசையாத ஒற்றை நம்பிக்கையில் இருந்தோம். நாட்கள் நகர... நகர... மௌனம் தொடர... தொடர... இன்று முதல்வர் சொன்ன நம்பிக்கை வார்த்தைகள் ஆட்டம் கண்டுள்ளது. மாதங்கள் பல கடந்த பின்னும் நமது முக்கிய கோரிக்கைகளில் ஒன்றைக்கூட செய்ய



முன்வராதது அவர் மீது வைத்திருந்த மாசற்ற நம்பிக்கைகளை, மரியாதைகளை சுக்குநூறாக நொருங்கியிருக்கிறது. குறைந்தபட்சம் அகவிலைப்படியைக் கூட உடனடியாக தருவதற்கு அந்த மாண்புமிகு மனிதருக்கு மனம் வராதது அரசு ஊழியர்களைப்பற்றிய அவரது எண்ண மதிப்பீடு என்ன என்பதை தெளிவுபடுத்தும் கண்ணாடியாக பிரதிபலிக்கிறது. ''மறக்கவுமில்லை, மறைக்கவுமில்லை, மறுக்கவுமில்லை.'' என்று சொன்ன முதல்வரைப் பார்த்து, ''சொன்ன சொல் என்ன ஆச்சு எம்முயிர் முதல்வரே?'' என்று கேட்கும் நிலைமைக்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை ஆளாக்கியுள்ளது அவரின் மௌனங்கள். சொன்னவை எல்லாமே நடிப்பு, நயவஞ்சகம், நம்பிக்கைத் துரோகம் என்று முடிவுசெய்ய வேண்டிய தருணத்தில்தான் நமது நம்பிக்கைகள் இருக்கின்றன.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப அமல்படுத்தக் கேட்டு பல அரசுகளிடம் கெஞ்சி, கூத்தாடி, வாதாடி, போராடி, கிட்டத்தட்ட 19 ஆண்டுகள் முடிந்துவிட்ட நிலையில் தான் முதல்வரானால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்துவேன் என்று நமக்கு உறுதிமொழி வழங்கிய திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தாந் முதல்வராகிவிட்ட பின்பும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வாக்களித்தபடி பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்துவதில் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடப்பது ஆச்சர்யத்திலும் ஆச்சர்யம்தான். பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர புது தில்லி, சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களும் மிகச் சமீபத்தில் இமாச்சல பிரதேச மாநிலமும் முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ள நிலையில் அதற்கு முன்னமேயே நமக்கு தேர்தல் வாக்குறுதி சொன்ன முதல்வர் ஸ்டாலின் அவர்களின் ''திமுக ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டம் நிச்சயம் நிறைவேற்றப்படும்'' என்ற வாக்குறுதி எங்கே போனது என்று தெரியவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரை பழைய ஓய்வூதியத் திட்டமும் இல்லாமல் புதிய ஓய்வூதியத் திட்டமும் இல்லாமல் 2003க்கு பின்னர் பணியில் சேர்ந்தவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்றதும் செட்டில்மெண்ட் வாங்கிக் கொண்டு அடுத்த மாதத்திலிருந்து வாழ்வாதாரத்திற்கு வழியில்லாமல் பிச்சை எடுக்க வேண்டிய சூழ்நிலைதான் இப்போது நிலவுகிறது. இந்த அபாயகரமான சூழ்நிலையிலிருந்து வெளிவர வேண்டும் என்றால் அதற்கான போராட்டங்களை உக்கிரமாக முன்னெடுக்க வேண்டியது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரின் கடமையாகும். இந்த நிலையை இப்படியே விட்டுவிட்டோமேயானால் 1.1.2003க்கு பிறகு

## போராட்ட கவுன்ட் டவுன்

**சந்திப்பு இயக்கம்**

கோரிக்கைகளை ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்றி டவும், உறுப்பினர் சந்திப்பு இயக்கத்தை எழுச்சியோடு துவக்கி டவும் அனைத்து வட்ட, மாவட்ட மையங்களில் வட்ட, மாவட்ட, மாநில நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் 09.01.2023 முதல் 27.01.2023 வரை ஊழியர் ஊழியர் சந்திப்பு மற்றும் உறுப்பினர் சேர்ப்பு இயக்கம்.

**மாவட்ட அளவிலான கோரிக்கைப் பேரணி**

வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி 10.02.2023 அன்று மாவட்ட அளவிலான பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் பங்கேற்றிடும் வகையிலான கோரிக்கைப்பேரணியை நடத்திடுவது

**ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம்**

வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி, பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப்பெற்றிட 28.3. 2023 அன்று லட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்கும் வகையில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை நடத்திடுவது.

**கோட்டை முற்றுகை**

அரசு நிறைவேற்றிடத் தவறும் பட்சத்தில் தமிழக அரசிடம் நியாயம்கேட்டு வரும் பட்ஜெட் கூட்டத்தொடரின்போது கோட்டை முற்றுகை.

அரசுப் பணியில் சேர்ந்த அனைவருக்கும் செட்டில்மெண்ட்தான் கிடைக்குமே தவிர ஓய்வூதியம் கிடைக்கவே கிடைக்காது. இந்த காரணத்தினால்தான் நாம் ஓய்வூதியம் என்ற வாழ்வாதார உரிமைகைகாக தொடர்ந்து தீப்பந்தம் ஏந்த வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.

கடந்த அதிமுக ஆட்சியில் எடப்பாடி திரு. பழனிச்சாமி அவர்கள் பேசியதைப்போலவே இந்த திமுக ஆட்சியில் அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் அரசு உழியர்களுக்கு அகவிலைப்படியும் சம்பள உயர்வும் அளிப்பது சமூக அநீதி என்று கார்ப்பரேட் கமெண்ட் பேசி தன் விசுவாசத்தைக் காட்டியதை நாம் கண்டித்ததோடு மட்டுமல்லாமல் அது குறித்து முதல்வரிடமும் புகாரும் தெரிவித்தோம். ஜாக்டோ ஜியோ வாழ்வாதார நம்பிக்கை மாநாட்டில் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் பெயரில் அனைத்துத் துறை போராட்டக்குழுவின் தலைவர்களும் முதல்வர் முன்னிலையில் மேடையில் தங்கள் கோரிக்கைகளை வாசித்தளித்து முதல்வரின் மௌனத்தை கலைத்து முதல்வர் தன் வாயாலேயே நம்முடைய கோரிக்கைகளை தான் மறுக்கவில்லை என்றும் மறக்கவில்லை என்றும் மறைக்கவும் இல்லை என்றும் கூற வைத்தோம். ஆனால் அவையெல்லாம் நம்பிக்கைகள் அல்ல வெறும் நாடகங்கள் என்று இப்போது புரியவந்துள்ளது.



"என்னாங்க இது மலைபோல குவிஞ்சு கிடக்கு."

"நீங்க 'மறக்கவில்லை' 'மறுக்கவில்லை'ன்னு சொன்னதையெல்லாம் நினைவூட்டி அரசு ஊழியர்கள் கடிங்கள் அனுப்பியிருக்காங்க சார்."

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரையில் காலிப்பணியிடங்கள் அதிக அளவில் உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் திராவிட மாடல் ஆட்சியின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை முதல்வருக்கு யாரும் சொல்லத் தேவையில்லை. நிர்வாகத்தில் வேலைகள் விரைவாக நடக்கவில்லை என்றால் அது விரைவாக நடக்க வழிதேட வேண்டுமே தவிர அவற்றை தனியாரிடம் ஒப்படைத்து விடுவதால் மட்டும் அந்தப்பணிகள் செம்மையாக நடந்துவிடும் என்பது நிதி மற்றும் பொருளாதார வல்லுநர்களின் அதீத கற்பனை. ஒரு அரசாங்கம் தன்னுடைய ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் அதிகமாக இருப்பதால் அந்த பொறுப்பிலிருதும் விலகிக்கொண்டு தனியார் வசம் ஒப்படைத்து விட முற்படுவது மிகவும் துரதிருஷ்டமானதாகும். அரசாங்கம், அதுவும் ஒரு மக்கள் நல அரசாங்கம் மக்கள் நலத் திட்டங்களுக்காக செலவிடும் தொகைகளையும் அதற்காக பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தையும் சுமையாக கருதுவது சமூகநீதி என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் திராவிட மாடல் ஆட்சியின் மாட்சிமைக்கு ஊறுவிளைவிப்பதாகும். தற்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்பபடும் சம்பளங்களையும், படிகளையும், ஓய்வூதியங்களையும் குறைப்பது என்ற ஆபத்தான போக்கினை மாற்றி அவற்றை முற்றாக ஒழித்து விட்டு தனியார்மயத்திடம் குறைந்தவிலைக்கு முற்றிலும் அரசாங்கத்தை விற்றுவிட தீர்மானித்திருப்பதுதான் அரசாணை எண்.115, 139 மற்றும் 152 ஆகியவற்றின் நோக்கம்.

ஒருபுறம் சமூக நீதி, மக்கள் நலன், ஊழியர் நலனில் அக்கறை, பழைய ஓய்வுதியத்தை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற வாக்குறுதிகளை மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அளித்துவிட்டு மறுபுறம் கவர்மெண்டை கார்ப்பரேட் மயமாக்குவதன் முக்கிய அஸ்திரமாகவே அரசாணைகள் எண்.115, 139 மற்றும் 152 ஆகியவற்றை தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த 'சீரமைப்பு' 'மனிதவளம்' போன்ற பசப்பு வார்த்தைகளைக் கொண்ட அரசாணையின் சில பகுதிகளை மட்டுமல்ல அரசாணையையே ரத்து செய்து உத்தரவிடுவதுதான் 'திராவிட மாடல் ஆட்சி'க்கு அர்த்தமுள்ளதாக இருக்கும். இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை பல ஆண்டுகளாக களையப்படாமலேயே இருக்கும் நிலையில் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டங்களில் இறங்கியுள்ளதும் போராட்டங்களை சுமுகமான பேச்சுவார்த்தைகள் நடத்தி முடிக்காமல் அவற்றை தொடரவிட்டு வேடிக்கைப் பார்ப்பது திராவிட மாடல் ஆட்சிக்கு அழகல்ல.

நிதி செலவினம் இல்லாத சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம், சாலைப்பணியாளர்களின் 41 மாத வேலைநீக்கத்தை பணிக்காலமாக வரைறுத்தல் போன்ற சில கோரிக்கைகளில் கூட முதல்வர் மனம் செலுத்தாமல் மௌனமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இதுபோன்ற அவுட்சோர்சிங் பணியிடங்களை ஏற்படுத்துவதில் முனைப்பாக உள்ளது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் மிகப்பெரிய மனக்குமுறல்களை ஏற்படுத்தியுள்ளது. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி, சரண்டர் போன்றவற்றை கொரோனா காலத்திற்குப் பிறகும் தொடர்சியாக நிறுத்தி வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகள் திராவிட மாடல் ஆட்சியின் சமூக நீதிக் கொள்கைகளுக்கு எந்தவிதத்திலும் ஏற்புடையதாக இருக்காது.

எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான் ஆட்சிக்கு வந்தால் அனைத்து கோரிக்கைகளையும் பரிசீலித்து முடிவெடுப்பேன் என்று ஒப்புக்கொண்டு உறுதிமொழி அளித்த கோரிக்கைகளின் பால் உடனடியாக கவனம் செலுத்தி ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்களை அழைத்துப் பேசி உடனடியாக நிறைவேற்றக்கூடிய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். அது நடவாதபட்சத்தில் தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துத் தொழிற்சங்க இயக்கங்களையும் ஒன்றுகூட்டி மாபெரும் போராட்டக்களத்தை வடிவமைத்து அனைத்து தரப்பினரின் கோரிக்கைகளுக்காக உரிமைப்போரில் இறங்குவதைத் நமக்கு வேறு வழியில்லை.

தோழர்களே! நாம் இழக்கப்போவது அடிமைச்சங்கிலிகளைத்தான் ஆனால் பெறப்போவதென்னவோ ஒரு பேருலகம். நினைவில் கொள்ளுங்கள் இனிமேல் நாம் இழப்பதற்கு ஒன்றுமில்லை. படைக்கப்போவதென்னவோ ஒரு பொன்னுலகம். அதற்காக நாம் ஒவ்வொருவரும் வீறுகொண்டு எழுவோம். விடிவுச் செங்கதிர் விரைவினில் தோன்றும், வெற்றிச் சங்கொலி விண்ணைத் தீண்டும். வாருங்கள் போர்க்களம் அமைப்போம், போர் முரசம் இசைப்போம்.●

## சூடா ஒரு கோப்பை சூப்

### அரசு ஊழியர்கள்!

அரசியல் சாசனத்தில்
அனைவரும் சமமாம்! - ஆனால்
அரசாங்க ஊழியர் மட்டும்
வேறோர் இனமாம்!

சரிதானா இந்த நீதி?
சமநீதி பேசுவோரே
முறைதானா கேட்க வேண்டும்
முரண்பாட்டை நீக்க வேண்டும்!

- கவிஞர் தணிகைச் செல்வன்

# சேலம் மாநில பிரதிநிதித்துவப் பேரவையின் வெற்றியை தீர்மானிப்போம்

பணக்காரரே .... பாராள்வோரே...
உங்களுக்கு நாளை இல்லை
ஏனெனில்
நீங்கள் பாட்டாளிக்கு
இன்று இல்லாமலாக்குகீறீர்கள்

என்றான் ஒரு கவிஞன்

புத்தாண்டு வாழ்த்துக்களுடன் 2023ஆம் ஆண்டின் கடமைகளை ஆற்ற தோழமையுடன் நமது சங்கம் அழைக்கின்றனது.

இன்று ஒவ்வொரு உழைப்பாளியும் ஓங்கி உரக்க முழங்க வேண்டிய கவிச்சரமாக மேற்கண்ட கவிதை உள்ளது. இன்று இந்த தேசத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது. உண்மையில் ஒரு வல்லரசு தேசத்திற்குரிய எல்லா தகுதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இம் மண்ணில் அதை வேண்டுமென ஆள்வோர் ஏதோதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். உலகையே ஆள்கிற அறிவையும், திறமையையும் வைத்திருக்கிற இந்திய இளைஞர் கூட்டம் தெருவில் அலைய விடப்படுகிறார்கள். ஏதிர்த்து பேச அல்ல. பேசவே கூடாத சூழலில் உணர்வுகளை அடக்கிக் கொண்டு தாங்கள் வாழ அனுமதிக்கப்படும் காலம் வரை உழைப்பாளிகள் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதுதான் நன்னடத்தையின் அர்த்தம். அழகு என்கிறது ஆளும் வர்க்கம். உழைப்பாளிகளும் மறுதலிக்காமல் உழைத்துக்கொண்டே இருக்கிறார்கள். என்றேனும் விடுதலை உண்டு எனும் நம்பிக்கையில்..... ஆனால் மரணம் ஒன்றே விடுதலை என்கிறது ஆளும் வர்க்கம். அது உண்மை எனில் அத்தகைய மரணம் இயற்கையாக நேர்வதல்ல. அது ஆள்வோர் செய்யும் படுகொலையே.

என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் என்றால் கவிஞன். ஆம் அளப்பரிய வளமிக்க இந்நாட்டில் வளங்களைப் பங்கு போட்டுக்கொள்ள இங்கு பல தந்திரங்கள் கையாளப்படுகிறது. வளங்களை உருவாக்குகிற உழைப்பாளிகளுக்கு உரிய கூலியைக் கொடுக்க மறுக்கிறார்கள். ஐம்பது ரூபாய் கூலி கொடுக்க வேண்டிய வேலைக்கு இருபத்தைந்து ரூபாய் கூலியில் ஆள் அமர்த்தும் அக்கிரமத்தை அரசே செய்கிறது.தொகுப்பூதியம், மதிப்பூதியம், அவுட்சோர்சிங், ஒப்பந்த நியமனம், தினக்கூலி, சிறப்பு காலமுறை ஊதியம் என ஏதோதோ பெயர்களைச் சொல்லி உழைப்பாளி மக்களின் ரத்தத்தை உறிஞ்சுகிறது ஆளும் வர்க்கம் எனும் சிலந்தி அச்சிலத்தியின் வலைப்பின்னலில் சிக்கிய ஈக்களாய் துடிக்கிறது நம் வர்க்கம்.

தேசம் விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆன பின்பு கூட விடுதலை பெற்ற இந்திய அரசு, தான் உருவாக்கிய குறைந்தபட்ச கூலி சட்டம் 1948ஐ தானே மீறுகிறது. இங்கே சமவேலைக்கு சம ஊதியம் என்ற சட்டப் பிரிவு அடக்கம். இது எதோ சட்ட மீறல் மட்டுமல்ல. இது ஒரு வன்முறை. ஆயுதம் கொண்டு தாக்குவது மட்டும் தான் வன்முறையல்ல. இங்கு கண்ணுக்குத் தெரியாமல் கொஞ்சம் கொஞ்சமாய் நம்மைச் சீரழிக்கிற வன்முறைகள் தான் ஏராளமாய் நிரம்பிக் கிடக்கிறது. அரசியல் சட்டப்படி அரசு செய்ய வேண்டிய கடமைகளைக் கூட சாதனைகளாக பறைச்சாற்றிக் கொண்டிருக்கிறது ஆட்சியாளர்களே இன்று சட்டத்தை மீறிய முதல் குற்றவாளிகளாக அம்பலப்பட்டு நிற்கிறார்கள். அதற்கு ஒரு உதாரணம்

இந்திய பொருளாதாரம் மேலும்மேலும் வீழ்ச்சி பாதையில் போய் கொண்டு இருக்கிறது. பத்திரிகைகளில் செய்தி வருகிறது. குறிப்பாக ஒன்றிய அரசின் சார்பில் பொருளாதாரத்தை மீட்டெடுத்து விட்டோம் என படாடோபமாகச் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இந்தியாவின் உற்பத்தி (Industrial Output) கடந்த மூன்று மாதங்களில் இரண்டாவது முறையாக 4 சதவீதமாக சுருங்கி இருக்கிறது.

ஒவ்வோராண்டும் தொழில் வளர்ச்சி தொடர்பாக வெளியிடப்படும் தரவுகள் உற்பத்தித் துறையில் (Manufacturing Output) குறிப்பிடத்தக்க அளவிற்கு 5.4 விழுக்காடு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதை காட்டுகிறது. தொழில் உற்பத்தி அட்டவணை (Industrical Production Index) அக்டோபரில் 129.6 ஆக இருக்கிறது. இது 2021 செப்டம்பருக்குப்பின் குறைவானதாகும். நுகர்வுப் பொருள்களின் உற்பத்தியில் நீடித்திருக்கக்கூடிய பொருள்களின் (Durables) உற்பத்தி 15.3 விழுக்காடு உடனடிப் பயன்பாடு உள்ள பொருள்களின் (Non durables) உற்பத்தி 13.4 விழுக்காடாக சுருங்கி வருகிறது. ஒன்றிய அரசின் கடந்த 8 ஆண்டு கால பி.ஜே.பி. ஆட்சியில் கடன் ரூ.147 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. குறிப்பாக கடந்த செப்டம்பர் 30ஆம் தேதி வரையிலான காலாண்டிற்கான கடன்கள் மட்டுமே 147 லட்சத்து 19 ஆயிரம் கோடிகளாக உயர்ந்துள்ளது. ஆக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலாண்டிற்கான கடன்கள் சேர்க்கப்படவில்லை. அதனையும் சேர்த்தால் கடன் தொகை மேலும் அதிகரிக்கும்.

பொது கடன்கள் (Public debit) என்பவை இந்திய அரசு பொது ஆதாரங்களில் இருந்து பெறும் கடன்கள் ஆகும். குறிப்பாக அரசு பத்திரங்கள், தொடர்பாக பெறும் கடன்களே பொதுக் கடன்களில் பெரும் பகுதியாகும். இதுபோக அரசு ஊழியர்களுக்கு செலுத்த வேண்டிய பென்சன் கட்டணங்கள் உள்ளிட்டவையும் இந்த பொதுக் கடன்களில் அடங்கும். அதன்படி பொதுக் கடன்கள் குறித்த விவரங்களை ஒன்றிய அரசு டிசம்பரில் 4வது வாரத்தில் வெளியிட்டுள்ளது.

இந்திய அரசின் மொத்தக் கடன் ரூ.147 லட்சத்து 19 ஆயிரம் கோடியாக அதிகரித்திருப்பது கடந்த ஜுன் 2022ல் இந்த கடன் தொகை ரூ.142 லட்சத்து72 ஆயிரம் கோடியாக இருந்த நிலையில் 3 மாதங்களுக்குள் 1 லட்சத்து 47ஆயிரம் கோடி கடன் அதிகரித்துள்ளது.

ஜுன் காலாண்டைக் தொடர்ந்து செப்டம்பர் காலாண்டில் இந்திய அரசின் பொதுக்கடன்கள் 1 சதவீதம் உயர்ந்துள்ளது. செப்டம்பர் 2022 இறுதி வரை இந்திய அரசின் மொத்த கன்களில் பொதுக்கடன்கள் 89.1 தசவீதமாக அதிகரித்துள்ளது. ஜுன் மாத்தில் 88.3 சதவிதமாக இருந்தது.

நடப்பு நிதியாண்டில் மொத்த நிதி பற்றாக்குறை இலக்கு 16 லட்சத்து 61 ஆயிரத்து 196 கோடியாகுமென்று மதிப்பிடப்பட்டு இருந்த நிலையில் நிதியாண்டின் முதல் அரையாண்டிற்குள்ளேயே(ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை) மொத்த நிதி பற்றாக்குறை இலக்கில்37.3 சதவீதம் எட்டப்பட்டுவிட்டது. இதேபோல் அரசு செலவு இலக்கிலும் அரையாண்டுக்குள்ளேயே 45.7 சதவீதம் தொட்டுவிட்டது. மொத்தம் 14 லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் செலவுகள் அரசு செய்துள்ளது.இதில் 30 சதவீதம் அதாவது 4 லட்சத்து 40 ஆயிரம் கோடி வட்டி செலுத்துவதற்கு பயன்படுத்தியுள்ளது. செப்டம்பர் காலாண்டிற்கு மட்டும் அரசு பத்திரங்களாக 4 லட்சத்து 6 ஆயிரம் கோடி ரூபாய் ஒன்றிய அரசு கடன் பெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி (மன்மோகன் சிங் அரசு) ஆட்சியை விட்டு இறங்கியபோது கடந்த 2014 ஜுலையில் இந்தியாவின் கடன் 54 லட்சத்து 90 ஆயிரத்து 763 கோடியாக இருந்தது. ஆனால் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு 8 ஆண்டுகளில் இந்த கடன் சுமார் 3 மடங்கு அதிகரித்துள்ளது. நாடு விடுதலை அடைந்ததில் இருந்து சுமார் 67 ஆண்டுகளில் இந்தியா பெற்ற கடன் ரூ.54 லட்சம் கோடி என்றால் பிரதமர் மோடி ஆட்சி வந்த 8 ஆண்டுகளில் இந்தியாவின் கடன் 92 லட்சம் கோடி அதிகரித்து ரு.147 லட்சத்து 19 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது (ஆனால் பிரதமர் அவர்கள் பிரான்ஸ் நாட்டைவிட பொருளாதாரத்தில் பின்னுக்கு தள்ளும் இந்தியா என்கிறார்.)

இவ்வாறு இருக்க பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டம், கொரோனா ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட போது கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்த போது கொண்டுவரப்பட்ட திட்டம். இத்திட்டத்தில் 81.35 கோடி மக்கள் ஒவ்வொரு மாதம் 5 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக பெற்றுவந்தளனர். ஆனால் தற்போது ஒன்றிய அமைச்சர் கெரோனா தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம், பொருளதாரம்

மேம்பட்டுவிட்டது. எனவே பிரதான் கரிப் கல்யாண அன்ன யோஜனா திட்டம் நிறுத்தப்படுகிறது என அறிவித்துள்ளார்.

தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டம் சுமார் 81.35 கோடி மக்களுக்கு ஓர் ஆண்டுக்கு 2 லட்சம் கோடி செலவு ஆகும் என்கிறது ஒன்றிய அரசு. உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 3ல் 2 பகுதி மக்களுக்கு அதாவது சுமார்81 கோடி பேருக்கு இலவச உணவுப் பொருள்கள் நியாய விலைக் கடைகளில் வழங்குவதன் மூலம் இந்தியாவில் வறுமை கடஜமயாக இருப்பதும், இலவச உணவு மூலம் மட்டுமே அதனை எதிர் கொள்ள முடியும்.(வறுமை, பட்டினி நாடுகளில் இந்தியா 107வது இடம். ஆப்கானிஸ்தானத்தைவிட நாம் ஒரு இடம் முன்னிலையில் உள்ளோம்.)

கரிப் கல்யாண் அன்ன யோஜனாவில் நிறுத்தப்பட்ட 5 கிலோ அரிசி வெளிச்சந்தையில் கிலோ ரூ.40, கோதுமை கிலோ ரூ.30 இது ஏழை மக்களுக்கு மேலும் சுமை. ஆனால் களவாணி முதலாளிகளுக்கு ரூ.10 லட்சம் கோடி கடன் தள்ளுபடி. பல லட்சம் கோடி வரிச்சலுகைகளும் அள்ளி தருகிறது. அந்த தொகையில் இந்த இலவச உணவுத் திட்டம் தொடர்நது நடத்தலாமே.

**அதிகரித்து வரும் வேலையின்மை**

45 ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலையின்மை விகிதம் தொடர்ந்துட ஏறுமுகம் நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இத்துடன் தொழிலாளர் பங்களிப்பு விகிதம் (டுயbடிரச நுஅயீடடிலஅநவே சுயவந) வீழ்ச்சி அடைந்திருப்பது மிகவும் மோசமாகும். வேலையின்மை விகிதம் நவம்பர் 2022ல் 8 விழுக்காடாக இருந்து அது டிசம்பரில் 8.8 விழுக்காடாக உயர்ந்துள்ளது. ஊரக வேலையின்மை விகிதம் 7.8 விழுக்காடாக இருக்கக்கூடிய அதே நேரத்தில் நகர்புற வேலை வாய்ப்பு 9.6 விழுக்காடாக பாய்ச்சல் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. மத்திய, மாநில அரசகளில் இந்தியாவில் கேசுவல் தொழிலாளர்கள், சாதாரண தொழிலாளர்கள் 15 கோடி பேர் உள்ளனர். ஓட்டு மொத்த தொழிலாளர்களில் இவர்கள் 30 விழுக்காடாக உள்ளனர். பொதுத்துறை நிறுவனங்களில் ஒப்பந்த தொழிலாளர்கள்4813950 என பத்திரிகை தகவல். தனி நபர் வருமானத்தில் 197 நாடுகளில் இந்தியா 142வது இடத்தில் உள்ளது.

விலைவாசி உயர்வு, பண வீக்கம் 6 விழுக்காடை விட அதிகமாக உள்ளது. உணவு பொருள்களின் பண வீக்கம், மக்களின் வாழ்வாதாரங்கள் மீது மேலும் சுமைகளை ஏற்றிக் கொண்டிருப்பது தொடர்கிறது. பால் விலை ஓர் ஆண்டில் 5 மடங்கு உயர்ந்துள்ளது. பெட்ரோல், எரிவாயு ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கச்சா எண்ணெயின் விலை சர்வதேச சந்தையில் குறைந்த போதும் இந்தியாவில் எரிபொருளின் விலை குறையவில்லை. இந்திய ஏற்றுமதி தொடர்ந்து குறைந்து வருகிறது. இதன் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. நிலை இப்படி இருக்க இந்திய நாடு பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் இருப்பதாக பிரதமர் மோடி கூறுகிறார்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு மத்திய, மாநில அரசுகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளம் மற்றும் மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்களின் கூட்டமைப்பின் தேசிய மாநாடு புதுதில்லியில் 2022 டிசம்பர் 8ம் தேதி நடைபெற்றது. அதில் போராடி பெற்ற உரிமைகளை காக்க நமது ஒன்றுபட்ட போராட்டத்தை வலுப்படுத்த நாடு முழுவதும் உள்ள மத்திய, மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கோரிக்கைகளுக்காக ஒன்று பட்டு போராடவும் புதிய தாராளமய, தனியார் மய, வகுப்புவாத மற்றும் எதேச்சாதிகார கொள்கைகளை எதிர்த்து பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டு அயராது பாடுபடவும் அந்த மாநாடு அழைப்பு விடுக்கிறது.

நாடு முழுவதும் ஊழியர் சந்திப்பு பிரச்சார இயக்கம், மாநில அளவில் கூட்டி திட்டமிடுதல், நாடாளுமன்றம் முன்பு தர்ணா, ஆயத்த மாநாடு செப்டம்பர் 2023 பாராளுமன்றம் நோக்கி பேரணி போன்ற தொடர் இயக்கத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அகில இந்திய இயக்கங்களில் மத்திய, மாநில அரசுகளின் கொள்கைகளின் விளைவுகளை அனைத்துப்பகுதி அரசு ஊழியர் ஆசிரியர் மட்டுமல்லாது இதர பகுதி உழைக்கும்

வர்க்கத்திடம் கொண்டு சென்று இருக்கும் உரிமைகளை காத்திடவும் இழந்த உரிமைகளை மீட்டிட மாநாடு அழைப்பு விடுத்துள்ளது.

இத்தகைய சூழலில் தான் 2022 டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெற்ற நமது சங்கத்தின் மாநல பிரதிநிதித்துவப் பேரவை போர்ப் பிரகடனம் செய்திருக்கிறது. தமிழக அரசு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் 2 ஆண்டுகள் நிறைவடைய போகிறது. 2021 நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில், தி.மு.க. அரசு அமைந்தால் புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்படும் என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்ததை மாண்புமிகு முதல்வருக்கு நினைவு படுத்த வேண்டிய நிலைக்கு அரசு ஊழியர்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள். கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலும் வாக்குறுதி கொடுத்து நிறைவேற்றப்படாத பட்சத்தில் அரசு ஊழியர், ஆசிரியர்கள் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம். ஏனவே ஒட்டுமொத்த பிரதிநிதித்தவப் பேரவையில் நிலுவையில் உள்ள கோரிக்கைகள் குறித்து ஆழமாக விவாதிக்கப்பட்டன. ஓவ்வொரு கோரிக்கையும் ஆண்டுக் கணக்கில் கிடப்பில் இருப்பதும், மாறிமாறி வரும் அரசுகள் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை தீர்ப்பதாக கூறி ஆட்சிக்கு வந்ததும் கண்டு கொள்ளாமால் விடுவிப்பது வழக்கமாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டன. இந்த மாநில பிரதிநிதித்துவப் பேரவை 4 அறைகூவல் தீர்மானங்களை பலத்த கரவோசைகளுடன் நிறைவேற்றப்பட்டன.

அரசாங்க வேலையில் சேர்பவர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் என்பது அவர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியமாகத்தான் இருக்கும் என்பதிலிருந்து தொடங்கி இன்று அரசுத்துறைகளையே தனியார்வசம் ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசு நிர்வாகம் வந்திருக்கிறது. இதன் விளைவுதான் நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி ஆட்சியாளர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. இது அதிகார வர்க்கத்தின் வழி காட்டுதல்களுக்கு ஆட்பட்டு அரசு நிர்வாகத்தை ஏழை எளிய மக்களுக்குரிய பாதுகாப்புடன் மக்களின் அடிப்படை தேவைகள் பாதிக்காத வகையில் நிர்வகிக்க தனியார்மயங்களும், அவுட்சோர்சிங் முறைகளும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளும் ஒருபோதும் உதவாது என்று தெரிவித்தும் அதைபற்றி கவலைப்படாமல் கண் மூடிக் கொண்டிருப்பது சமூக அக்கறையும், மக்களுக்கான அரசாங்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு நிலை பாதிப்புகளை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. (உதாரணம் கொரோனா காலத்தில் மக்களை பாதுகாத்தது அரசு ஊழியர்கள் தான்)

அரசாங்க வேலைக்கு ஆள் எடுக்கத் தடை, காலிப்பணியிடங்களை நிரப்பாமல் அப்படியே விட்டுவிடுதல், புதிய பணியிடங்களை நிரப்பாமல் அப்படியே விட்டுவிடுதல், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது, தேவைப்படும் இடங்களில் தற்காலிகப்பணியாளர்களை நியமித்துக் கொள்வது, வேலை முடிந்ததும் அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுதல் (Hire and Fire) கார்ப்பரேட் மாடல், ஒப்பந்த முறையில் பணியாளர்களை அமர்த்துதல், அவுட்சோர்சிங் முறையில் ஊழியர்களை நியமித்தல், போன்ற பல கட்ட வடிகட்டலுக்கு பின்னர் தமிழக அரசு பெரும்பான்மையான துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் முடிவுக்கு வந்துள்ளது. அக்டோபர் 2022ல் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணை 115. 139, 152 வெளியிட்ட அரசு ஆணை சூசகமாக உணர்த்தியுள்ளது.

அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியும் இதரப் பணியிடங்களை வெளி முகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங்களை மேற்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட அரசு ஆணைகள் அரசுப் பணிகளை முற்றிலும் ஒழித்துக்கட்ட சாணை தீட்டப்படும் கத்தி என்றும் இதனால் மக்கள் நலன் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவித்து மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு இந்த ஏற்பாட்டை தவிர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசுக்கு வேண்டுகோள் வைத்து

சமுக அக்கறை உள்ளவர்களும் மக்கள் நலத் திட்டங்களை மதிப்பவர்களும் இதுபோன்ற ஆட்குறைப்பு, துறை ஒழிப்பு நடவடிக்கைகளால் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும், மக்கள் நலன் சார்ந்த துறைகளும், திட்டங்களும் அரசின் வசமே இருக்க வேண்டும் என்றும், அரசு வேலை வாய்ப்பினை நம்பியுள்ள இளைஞர்களின் எதிர்காலம் இருளடைந்துவிடும் என்றும், அரசாங்கத்திற்கு சுட்டிக் காட்டியும் அரசோ எதைப்பற்றியும் கவலைப்படாமல் அடுத்தடுத்த கவனம் காட்டி வருகிறது. அதன் எதிரொலிதான் இத்தனை பெரிய எதிர்ப்புகளுக்கிடையில் அரசு ஆணை 115,139,152 தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

சமூகப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய புதிய ஓய்வூதியம் ரத்து செய்து பழைய ஓய்வூதியம் அமல்படுத்த வேண்டும், அதேபோல் தொன்றுதொட்டு போராடி வரும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்புற நூலகர்கள், எம்.ஆர்.பி.b சவிலியர்கள் இன்னும் இன்னும் சகல பகுதி கொத்தடிமை கூலிகளையும் மீட்டெடுத்து வரையறுக்கப்பட்ட ஊதியம் பெற்றிடவும், அரசு வழங்கிய அகவிலைப்படி நிலுவையுடன் வழங்கிடவும், முடக்கப்பட்ட சரண்டர், காலை உணவு வழங்கும் பணியை சத்துணவு ஊழியர்கள் மூலம் நடத்திடவும், அரசு ஆணை 115ன் மூலம் அரசுத்துறைகளில் நிரந்தரப் பணியிடங்களை ஒழித்துக் கட்டுதல், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி நிரந்தரப் பணியாளர்களை அழித்திடும் அரசு ஆணை 139,152 உடன் ரத்து செய்திட வேண்டும், சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிக் காலமாக முறைப்படுத்திட வேண்டும, அரசுத்துறையில் காலியாக உள்ள 4.5 லட்சம் பணியிடங்களை உடன் நிரப்பிட வேண்டும், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும், ஊதிய மாற்ற 21மாத ஊதிய நிலுவை தொகையை வழங்கிட வேண்டும், துறைவாரி, பிரிவு வாரி சங்கங்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியதுதான் நியாயமானதும், தர்மமானதுமாகும்.

ஆனால் ஆளும் அரசோ அரசு ஊழியர்களின் ஊதியத்தை மட்டும் தர மறுப்பது அரசு ஊழியர்களின் தார்மீக உரிமையை தட்டிப் பறிக்கும் செயலாகும். அரசின் கஜானாக்களை சுரண்டி ஓட்டையாக்கிவிட்ட அரசியல்வாதிகள் இப்போது அரசு ஊழியர்களின் பாக்கெட்டை சுரண்டி சுகம் காண முனைந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அரசியல்வாதிகளின் ஊழல்களுக்கும், சுரண்டல்களுக்கும் எதிராக ரௌத்திரம் பழக வேண்டிய அவசியம் இப்போது எழுந்துள்ளது. எனவே அரசு ஊழியர்கள் மீதும் நிர்வாகிகள் மீதும் ஏவப்படும் நடவடிக்கைகளை அரசு திரும்ப பெறவும், ஜனவரியில் நடத்தக்கூடிய ஊழியர் சந்திப்புகளும், மாவட்ட அளவில் கோரிக்கை பேரணியும் மற்றும் மார்ச் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்திலும் அதைத் தொடர்ந்து நமது வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றப்படாத பட்சத்தில் கோட்டை முற்றுகை போராட்டத்திலும் நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக கலந்து கொண்டு கோரிக்கைகளை வென்றெடுக்க வெற்றியை தீர்மானிப்போம். ●

**ரூ.1.25 லட்சம் கோடி கறுப்புப் பணத்தை ஒன்றிய அரசு கைப்பற்றியுள்ளது - செய்தி**




"என்ன பி.ஏ. காலையிலேயே இவ்வளவு கூட்டம்? புத்தாண்டு வாழ்த்து சொல்ல வந்திக்காங்களா?"

"அப்படின்னாதான் பரவாயில்லியே, டிவியில செய்தியை பாத்துட்டு, கைப்பற்றின கறுப்பு பணத்துல ஆளுக்கு ரூ.15 லட்சம் எப்போ தரப்போறீங்கன்று உங்ககிட்டே கேட்க வந்திருக்காங்களாம் சார்."

# கே(ா)ப்பையில் வழிந்த தேன்!

**- ஜிஜி**

டியர் காம்ரேட்

வந்து கொண்டிருக்கும் செய்திகள் எதுவும் நம்பிக்கையை விதைப்பதாக இல்லை. வேலை வாய்ப்புகள் அரசுத் துறைகளில் 80 சதவீதம் முடக்கப்பட்டு விட்டது என்பதை தமிழகத்தில் அரசுத்துறைகளில் 6 லட்சம் பணியிடங்கள் காலியாக விடப்பட்டிருப்பதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. வருடந்தோறும் ஊழியர் சங்கங்களும், தொழிற்சங்கவாதிகளும், சில அரசியல் தலைவர்களும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டிய அரசின் தலையாயக் கடமையை பலவித போராட்ட யுக்திகள் மூலம் உணர்த்தினாலும் அரசு அதைப்பற்றி கவலைப்படாமல் அடுத்த நகர்வுக்குள் சென்றுகொண்டிருக்கிறது. காலியாக விடப்பட்ட பணியிடங்களை, தேவையற்ற பணியிடங்களாக மாற்றி பிறகு அந்தப் பணியிடங்களை ஒழித்துக்கட்டி வருகிறது அரசு. இன்னொரு புறம் துறைகளை ஒன்றிணைத்தல் என்கிற நிகழ்வின் மூலம் அரசுத்துறைகளும் குறைக்கப்பட்டு வருகின்றன. சம்பளக் கணக்குத் துறை, பாஸ்போர்ட் அலுவலகம் போன்றவை தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை விடப்பட்டுள்ளன. இவையெல்லாம் போக அரசுத் துறைகளில் துப்புறவுப் பணியாளர், அடிப்படை பணியாளர், அலுவலக உதவியாளர், வாட்ச்மேன், போன்ற வேலைகளுக்கு அரசாங்கம் ஆட்களை நியமனம் செய்யாமல் அவுட்சோர்சிங் என்ற வெளிமுகமை மூலம் ஆட்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. கடந்த மாதத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் உள்ள காலிப் பணியிடங்களை வெளி முகமை மூலம் நிரப்பிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், எதிர்கட்சிகள், சமூக ஆர்வலர்கள் எதிர்த்து கேட்டபின் தற்போது அந்த அரசாணைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நிறுத்தி வைத்தது போதாது அதை முற்றிலும் நீக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உள்ளிட்ட அனைத்து துறைவாரிச் சங்கங்களும் கோரி வருகின்றன.

அரசுத்துறைதான் என்றில்லை, தமிழகத்தில் இயங்கும் ஐ.டி. துறை எனப்படும் தகவல் தொழில்நுட்பத் துறைகளிலும் பணி நீக்க வேலைகள் நடந்து வருகின்றன. உலகப் பொருளாதார மந்த நிலை என்று காரணம் கூறி தகவல் தொடர்பு நிறுவனங்களில் வேலை பறிப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருவது அனைத்துத் தரப்பினரையும் குறிப்பாக இளைஞர்களை அச்சமுற வைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் 227 பில்லியன் டாலர் வளர்ச்சியையும் 0.45 சதவிகித மில்லியன் வேலைவாய்ப்பையும் கொண்டிருந்த ஐ.டி நிறுவனங்கள் தற்போது உலக அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகளை சமாளிக்க சம்பளம் குறைப்பு மற்றும் வேலை பறிப்பு நட வடிக்கைகளில் இறங்கியுள்ளன. செலவுகளைக் குறைக்கவும், லாப வரம்புகளை பாதுகாக்கவும் விரும்பும் போது அது அரசாங்கமாக இருந்தாலும் சரி, ஐ.டி.நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அவை பணிநீக்க நடவடிக்கைகளையே தெரிவு செய்கின்றன. சமீபத்தில் Amazon, CISCO, Twitter, Meta, HP, Alphabet போன்ற நிறுவனங்கள் தங்களது ஊழியர்களில் 6.1 சதவிகிதம் பேரை நீக்கியுள்ளன ஸ்டார்ட் அப் (Start up) நிறுவனங்கள் ஊழியர்களை வேலைக்கு எடுப்பது 61 சதவிகிதம் குறைந்துள்ளது. தமிழகத்தில் இயங்கி வரும் ‘வெர்ச்சூசா’ போன்ற நிறுவனங்கள் தங்களது ஊழியர்களை எந்தவித முன்னறிவிப்புமின்றி சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்துள்ளன. நூற்றுக்கணக்கான தமிழக மென்பொறியாளர்கள் இளம் வயதிலேயே வேலையிழக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர் நலச் சட்டங்களை ஐ.டி. நிறுவனங்கள் முழுமையாக



அமல்படுத்துவதில்லை. ஒன்றிய, மாநில அரசுகளும் தொழிலாளர் நலச் சட்டங்களை ஐ.டி.நிறுவனங்கள் அமல்படுத்திட உரிய நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. இதனால் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இளைய தலைமுறையினர் பணிப் பாதுகாப்பு இல்லாமல் எதிர்காலம் குறித்த அச்சத்தில் சிக்கியுள்ளனர்.

இளைஞர்ளின் நிலை அப்படி என்றால் ஏழை, எளியர்வர்களின் நிலையோ இன்னும் மோசமாக ஆகியிருக்கிறது நம் நாட்டில். ஏழைகளுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச அரிசி, கோதுமையை கடந்த டிசம்பர் 31ஆம் தேதியோடு மோடி அரசு நிறுத்தியிருக்கிறது இதற்கு பல தரப்பிலிருந்தும் கடும் கண்டனம் எழுந்துள்ளது. பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டம், கொரோனா பரவல் காலத்தில் ஊரடங்கு பிறப்பிக்க ப்பட்ட காலத்தில் கோடிக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்தபோது அமலுக்கு வந்த திட்டமாகும். ஏழை, எளியர்வர்களின் குடும்பங்களைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு மாதமும் தலா ஒருவருக்கு ஐந்து கிலோ உணவு தானியங்களை இலவசமாக வழங்கியது ஒன்றிய அரசு. 2020-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு இதுவரை 47 பில்லியன் டாலர் செலவளிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசு கூறுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 81.35 கோடி மக்கள் ஒவ்வொரு மாதமும் ஐந்து கிலோ உணவு தானியங்களை இலவசமாகப் பெற்று வந்தனர். இது குறித்து ஒன்றிய உணவு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், “கொரோனா தொற்றுப்பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலைமையும் மேம்பட்டு விட்டது. எனவே 28 மாதங்கள் நடை முறைப்படுத்தப்பட்ட பிரதான் மந்திரி கரிப் கல்யாண் அன்ன யோஜனா திட்டம் முடிவுக்கு வருகிறது” என்று கூறியுள்ளார். இம்மக்களுக்கு எதிர்வரும் 12 மாதங்களுக்கு இலவசமாக பொருட்களை வழங்க ரூ.2 லட்சம் கோடி செலவாகும் என்கிறது ஒன்றிய அரசு. அதே சமயத்தில் உலகளாவிய பட்டினிக் குறியீட்டில் இந்தியா 108-ஆவது இடத்தில் உள்ளது என்பதை ஒன்றிய அரசு மறுக்கிறது. உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மக்களுக்கு இலவசமாக ரேஷன் பொருள்களை அளிப்பது 2023ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டால் மூன்றில் இரண்டு பங்கு மக்களைப் பட்டினிச் சாவுகள் மூலமாக இறந்துவிடக் கூடிய வைப்புகள் அதிகம் உள்ளது என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். இந்த நிதர்சனத்தைப் பற்றி மோடி அரசு கொஞ்சம் கூட கவலைப் படவில்லை.

தனக்கிருக்கும் அறுதி பெருன்பான்மை மூலம் பல மாநில கூட்டுறவு சங்கங்களின் திருத்தச் சட்டமுன்வடிவினை பாஜக அரசு மக்களவையில் கொண்டுவந்திருப்பது கூட்டாட்சி மற்றும் மாநில உரிமைகளின் மீதான தாக்குதலாகும். கூட்டுறவு என்பது மாநிலப் பட்டியலில் உள்ளதாகும். இப்போது முன்மொழியப் பட்டிருக்கும் சட்டமுன்வடிவு, மாநிலங்களில் உள்ள சட்டங்களின்படி செயல் பட்டுக்கொண்டிருக்கும் மாநிலக் கூட்டுறவு சங்கங்களின் மீது ஒன்றிய அரசாங்கம், அப்பட்டமான முறையில் தாக்குதலைத் தொடுக்க வகை செய்கிறது. இது, ஒன்றிய அரசாங்கம், கூட்டுறவு சங்கங்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கான நடவடிக்கையே தவிர வேறல்ல. இது மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அரசாங்கங்களின் உரிமைகளின் மீது தொடுக்கப் பட்டிருக்கும் ஏவுகணை தாக்குதலாகும். கூட்டாட்சித் தத்துவத்தை குழி தோண்டி புதைத்துவிட நினைக்கும் பாசிசத்தின் கோர முகம் இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது..

2014இல் மோடி அரசு பதவியேற்றதிலிருந்து இந்திய பொருளாதாரம் கடும் வீழ்ச்சியே அடைந்திருக்கிறது. பணமதிப்பிழப்பிற்கு பின் ரூ.15 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஜி-20 நாடுகளுக்கு தலைமைப் பொறுப்பை ஏற்றதால் உலகத்துக்கே தலைமை தாங்குவதாகவும், அதை நாடு முழுவதும் கூட்டங்கள் நடத்தி தங்களது வீரபிரதாபங்களை காட்டப்போவதாகவும் கூறியிருக்கிறார் மோடி. இவரது அரசின் விளம்பரச் செலவுகள் மட்டும் கடந்த எட்டாண்டுகளில் ரூ.6491 கோடியாகும். மின்னணு ஊடகங்களில் விளம்பரச் செலவு ரூ.3260.79 கோடி. இப்படி விளம்பரங்களாலே தலைவராக உலா வந்துகொண்டு தனது ஊதாரித் தனத்தால் நாட்டின் செல்வத்தை பாழாக்கிக் கொண்டிருக்கிறார் நமது பிரதமர்.

நாட்டில் உள்ள 25 விமான நிலையங்களை தனியாருக்கு குத்தகைக்கு விடப்போவதாக நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. அதில் தமிழ்நாட்டின் சென்னை, மதுரை, கோவை, திருச்சி விமான நிலையங்களும் அடங்கும். இந்த நான்கு விமான நிலையங்களையும் குத்தகைக்கு விடுவதன் மூலம் ரூ.4694 கோடி பணம் திரட்டு வது என முடிவு செய்யப்பட்டுள்ளதாம். இதுபோல் மற்ற விமான நிலையங்களும் குத்தகைக்கு விடப் படுவதன் மூலம் ரூ.13945 கோடி திரட்ட திட்ட மிட்டுள்ளது மோடி அரசு. தேசிய பணமாக்கல் திட்டம் என்பதன் பெயரில் நாட்டில் உள்ள அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்கு தாரை வார்க்கும் காரியத்தில் மோடி அரசு மிகத் தீவிரமாக வேலை செய்கிறது. அதற்கு ஆதாயம் இல்லாமல் இருக்குமா? இவர்கள் விற்கும் துறைகளை வாங்கும் நிறுவனங்கள், பாஜகவுக்கு மிகமிகத் தாராளமாக நன்கொடைகளாக தேர்தல் பத்திரங்கள் என்ற பெயரில் நிதியை வாரி வாரி வழங்குகின்றன என்பதை கவனிக்க வேண்டும். இத்தகைய கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அதன் முதலாளிகளுக்கு அரசு வங்கிகளில் கடன் தள்ளுபடியும் மோடி அரசால் தாராளமாக செய்யப்படுகிறது. ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கடந்த ஐந்து ஆண்டுகளில் ரூ.10,09,511 கோடி வராக் கடனை செயல்படாத சொத்தாக அதாவது வசூலிக்காத, வஜா செய்கிற கடனாக வரையறுத்துள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை மட்டுமே விற்பதாக கூறப்பட்டது. பின்னர் லாபம் தரும் நிறுவனங்களையும் விற்கலாயினர். இவர்களது இலக்கு நாட்டின் பொதுச் சொத்துக்களை செல்வவளங்களை தனியார் முதலாளிகளுக்கு தாரை வார்ப்பதாகும். 2021- 22 ஆம் ஆண்டு வரை கடந்த 4 ஆண்டுகளில் வங்கிகள் ரூ.8,48,186 கோடி கடனை தள்ளுபடி செய்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இது யாருடைய பணம் மக்கள் வரிப்பணம். இப்படி மக்களுடைய வரிப்பணத்தை வாரி இறைத்தால் அம்பானிகளும் அதானிகளும் ஏன் உலகின் முதல் இரண்டாம் பணக்காரர்களாக இருக்கமட்டர்கள்?

1990களில் இந்த மூன்று வார்த்தைகளை கேட்டபோது தேன் வழிவது போல் இருக்கிறது என்றார்கள் நிச்சயம் கோப்பையில் தேன் வழியும் என்றார்கள் பல அரசியல்வாதிகளும், பொருளாதார வல்லுனர்களும், விமர்சகர்களும். இளைஞர்கள்கூட இனி உலகம் உள்ளங்கையில் சுருங்கிவிடும் என்று கனவு காணத் துவங்கினார்கள். இடதுசாரிகள் மட்டும் தொலை நோக்கில் உற்றுப்பார்த்து கோப்பையில் தேன் வழியவில்லை கேப்பையில்தான் தேன் வழிகிறது என்றார்கள். அப்போது பலபேரும் அதை நம்பவில்லை ஆனால் 30 ஆண்டுகளுக்குப்பிறகு இப்போது நடந்திருப்பது, நடந்து கொண்டிருப்பது எல்லாம் தலைகீழாக. உள்ளங்கையில் சுருங்கிய உலகம் உள்ள்ளங்கையையே சுரண்டி எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த மூன்று வார்த்தைகள் ``தாராளமயம், தனியார்மயம், உலகமயம்.`` 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது பார்த்தால் செல்வந்தர்கள் மேலும் செல்வந்தர்களாக கொழுத்திருப்பதையும் நடுத்தர மக்கள் ஏழைகளாகவும் ஏழைகள் பிச்சைகாரர்களாகவும், பிச்சைக்காரர்கள் பட்டினி சாவுகளுக்கு பலியானவர்களாகவும் ஆகியிருப்பதையும் படம் போட்டு காட்டியிருக்கிறது புள்ளி விவரம். கொரோனா காலத்தில்கூட செல்வந்தர்கள் மற்றும் கார்ப்பரேட்டுகளின் வருவாய் அதிகரித்துக் கொண்டுதான் இருந்தது. அவர்கள் எந்த வகையிலும் நட்டம் அடையவில்லை. ஆனால் நடுத்தர மற்றும் ஏழைகளின் வாழ்வாதாரங்கள் கேள்விக்குறியாகிவிட்டன. உப்புக்கு வரி போட்டபோது போராட்டம் நடத்திய நாடு இன்று அரிசிக்கு வரிபோடும்போது எதிர்க்க திராணியற்றுக் கிடக்கிறது. இப்படியே போனால் நாம் விடும் மூச்சுக்கும் வரிபோட்டு விடுவார்கள். அந்த நிலைக்கு போவதற்கு முன்னர் படித்த இளைஞர்கள் முதல் பாமரர் வரை ஒன்றிணைந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இந்த மாதத்திற்கான டச்சிங் குறுங்கவிதை தோழர் தணிகைச் செல்வனுடையது. ஒரு கேள்விக் குறியின் அட்வைஸ்:

என்னை எப்போது
நிமிர்த்தப்போகிறீர்களோ
அப்போதுதான் நீங்கள்
நிமிரப் போகிறீர்கள்!

●

# எண்ணிய எண்ணியாங்கு எய்திட, சொன்னதை சொன்னபடி செய்திடுங்கள்

# மாண்புமிகு முதல்வர் அவர்களே!

மக்கள் நலம்பேணும் அரசின் மாண்புமிகு முதல்வர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக தங்களுக்கும் தங்கள் அமைச்சரவைக்கும் 2023 ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களுடன் கூடிய வணக்கங்கள்.

2023ஆம் ஆண்டின் முதல் அறிவிப்பாக தாங்கள் அறிவித்துள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான 4 சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிப்பினை வரவேற்கிறோம்.

என்றாலும் ஆறு மாதங்கள் காலம்கடந்து பல போராட்ட அறிவிப்புகளுக்குப் பின்னர் 01.01.2023 தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ள இந்த அறிவிப்பினால் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுவிடவில்லை. மாறாக, ஆறுமாதங்கள் தரப்படாமல் விடப்பட்டுள்ள அகவிலைப்படியால் 16 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு சுமார் 1179 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் அடிப்படை ஊழியர்களிலிருந்து அதிகாரிகள் வரை ஒவ்வொருவருக்கும் சுமார் ரூ.12,000/- முதல் ரூ.1,20,000/- வரை இந்த ஆறுமாதங்களில் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். இதுபோல் இதுவரை மூன்று அகவிலைப்படி உயர்வுகளை ஒன்றிய அரசு அறிவித்த பின்னர் ஒவ்வொரு முறையும் ஆறுமாத காலம் கழித்தே தமிழக அரசு ஊழியர்கள் பெற்றுவருவதால் ஒவ்வொரு அரசு ஊழியர் மற்றும் ஆசிரியருக்கு குறைந்தபட்சம் ரூ.50,000/- முதல் ரூ.3,50,000/- வரை அகவிலைப்படி மூலமாக மட்டும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இப்படி இந்த அரசு அகவிலைப்படி உயர்வை 18 மாத காலதாமதமாக வழங்கியதன் மூலமாக ரூ.3,534/- கோடி வரை அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு இந்த அரசாங்கம் நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளது என்று கூறுவது தான் ஏற்புடையதாக இருக்கும்.

அகவிலைப்படி என்பது அரசின் கருணையால் வழங்கப்படும் பரிசுத் தொகையோ, லாபத்தொகையோ அல்ல என்பதும் அது நாட்டில் உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வுக்கு ஏற்ப அரசில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் விலைவாசி உயர்வினை ஈடுகட்டும் தொகை என்பதையும் இந்த அரசு அறியும். நிலைமை இவ்வாறிருக்க அரசு இந்தத் தொகைகளை காலம்தாழ்த்தி வழங்கி ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மன உளைச்சல்களையும் நிதிச்சுமைகளையும் ஏற்படுத்தி விட்டு இப்போது வழங்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,359/- கோடி கூடுதல் செலவினம் ஏற்படும் என கூறியுள்ளது வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒப்பானதாகும். சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமையை அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்குவதில் காலதாமதம் செய்து வழங்குதன் மூலமாக அரசு ஊழியர்களுக்கு பணப்பற்றாக்குறையை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் மக்கள் நலப்பணி செய்யும் அரசு ஊழியர்களுக்கு விலைவாசி உயர்வுக்கு ஏற்ப வழங்கப்படும் அகவிலைப்படியால் அரசாங்கத்திற்கு சில ஆயிரம்கோடி ரூபாய்கள் கூடுதல் செலவு ஏற்படுவதாக அறிவிப்பு வெளியிடுவது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை கொச்சைப்படுத்தும் செயலாகவே நாங்கள் பார்க்கிறோம். எனவே, இதுபோன்ற சட்டப்படியான உரிமைகளை வழங்கும்போது அதனால் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவினத்தை சுட்டிக்காட்டுவதை தவிர்க்க வேண்டும் என்று



மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம். அகவிலைப்படி உரிமை என்பது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராடிப் பெற்ற உரிமை என்பதையும் மத்திய அரசு எப்போதெல்லாம் அகவிலைப்படி அறிவிக்கிறதோ அதே தேதியிலிருந்து மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி வழங்கப்படும் என்று மாண்புமிகு முன்னாள் முதல்வர் கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்கள் காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட உரிமை இது என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். எனவே, 1.7.2022 முதல் வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படியை முன் தேதியிட்டு நிலுவைத் தொகையோடு வழங்கிட உத்தரவிடுவதுதான் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு மாண்புமிகு முதல்வரின் உண்மையான புத்தாண்டு பரிசாக இருக்கமுடியும் என்பதையும் கோடிட்டு காட்டிட விரும்புகிறோம்.

அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் பெரும்பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்கினை முழுமையாக உணர்ந்துள்ள அரசு அவர்களின் நலன்களையும் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கும் வகையில் ஏற்கெனவே உறுதியளித்துள்ளபடி பழைய ஓய்வூதியத் திட்டத்தையும், மறு உத்தரவு வரை நிறுத்தி வைத்துள்ள ஈடுகட்டிய விடுப்பை பணமாக்கிக் கொள்ளும் உரிமையையும் உடனடியாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம். பல மாநிலங்களில் பழைய ஓய்வுதியத் திட்டம் அமல்படுத்தப்படும் நிலையில், அதற்காக 19 ஆண்டுகாலமாக போராடி வரும் தமிழக அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்கெனவே ஒப்புக்கொண்டு உறுதியளித்துள்ளபடி மீண்டும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். இந்த திட்டத்தை அமல் படுத்துவதன் மூலம் அரசுக்கு எந்தவித நிதி இழப்பும் ஏற்படாத நிலையில் உடனடியாக இதுகுறித்த அறிவிப்பு செய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

இவைபோக, வரையறுக்கப்பட்ட ஊதியம், நெடுஞ்சாலைத் துறை ஊழியர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக அறிவித்தல், ஊதிய மாற்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 21 மாதகால நிலுவைத் தொகை, ஊதிய முரண்பாடுகளை களைதல் போன்ற நிலுவையிலுள்ள கோரிக்கைகளையும் பரிசீலித்து படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

இரண்டு ஆண்டுகள் நிறைவு செய்யும் தருவாயில் உள்ள இந்த ஆட்சியில் தமிழக முதல்வர் அவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 2021 தேர்தலின் போது கொடுத்த உறுதிமொழிகளை உடனடியாக நிறைவேற்றிடக் கேட்டுக் கொள்கிறோம்.

**2024ல் எண்ணிய எண்ணியாங்கு எய்திட,**
**அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களுக்கு**
**சொன்னதை சொன்னபடி செய்திடுங்கள்**
**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே!**


2023 புத்தாண்டின் புரட்சிகர தோழமை வாழ்த்துக்களுடன். ●

## "பஞ்ச்" மொரப்பா



**நாம் வெறுப்புடன் பிறப்பதில்லை...**
**அவை பின்னர் கற்பிக்கப்படுகின்றன!**

கட்டுரை



# ஜீவா எனும் மகத்துவம்

**- பெரணமல்லூர் சேகரன்**

"காலுக்குச் செருப்பு மில்லை
கால் வயிற்றுக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோமடா-என் தோழனே
பசையற்றுப் போனோமடா"

"பாலின்றிப் பிள்ளை அழும்
பட்டினியால் தாய முவாள்
வேலையின்றி நாம முவோம்-என் தோழனே
வீடு முச்சூடும் அழும்"

"கோடிக்கால் பூதமடா..தொழிலாளி கோபத்தின் ரூபமடா" எனும் கவிதைகள் காலத்தால் அழியாமல் ஜீவாவை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் எனின் மிகையன்று.

சுதந்திரப் போராட்ட வீரராக, பொதுவுடமைப் போராளியாக, மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கிய தோழர் ஜீவாவின் நினைவு நாள் ஜனவரி 18.

தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவராக விளங்கிய பொதுவுடமைப் போராளி தோழர் ஜீவா, பொது வாழ்வில் நாற்பது வருடம் ஈடுபட்டு, பல்வேறு சிறைத்தண்டனைகளையும் சோதனைகளையும் தாங்கிய தியாகி. தன்னுடைய ஆயுள் காலத்தில் பத்து வருடங்கள் சிறையில் கழித்த இவர், காந்தியவாதியாக, சுயமரியாதை இயக்கப் பற்றாளராக, இலக்கியவாதியாக பொதுவுடமை இயக்கத் தலைவராக செயலாற்றியவர்.

ஜீவா என்று அன்புடன் அழைக்கப்படும் தோழர் ப.ஜீவானந்தம் சிறு வயதிலேயே காந்தியின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டார்.

ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போதே கவிதைகளும், நாடகங்களும் எழுதி நடிக்கவும் செய்தார். தமிழிலக்கியம் மீது தனி ஆர்வம் கொண்டிருந்தார். பெரும் இலக்கியவாதியாகவும், பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார். குடியரசு, ஜனசக்தி, பகுத்தறிவு, புரட்சி, தாமரை ஆகிய இதழ்களுக்குப் புரட்சிகரமான கட்டுரைகளும், கவிதைகளையும் படைத்தவர். பொதுவுடமை மேடைகளில் முதல் முறையாக தமிழ் கலாச்சாரத்தோடு கலந்துரையாடல் நடத்தித் தமிழிலக்கியம் பேசியவர் ஜீவா. தமிழோடு சேர்த்து கட்சியையும் வளர்த்தார். காங்கிரஸ் ஆட்சியில் கம்யூனிஸ்ட்கள் வேட்டையாடப்பட்டபோது, ஜீவா தலைமறைவு வாழ்க்கை மேற்கொண்டார். ஜீவாவிற்கு பொதுவுடைமை ஒரு கண் என்றால், மேடையில் இலக்கிய முழக்கம் செய்வது இன்னொரு கண் போல. இலக்கிய மேடைகளில் ஜீவா ஏறினால், அவரது பேச்சை ரசிக்க அக்காலத்தில் இளைஞர்கள் திரண்டுவருவர். ஒரு தேர்ந்த தமிழறிஞர் போல அவர் நாவாடுவதை தமிழறிஞர்களும் பெரிதும் ரசிப்பர். அக்காலத்தில் அது எல்லா தலைவர்களுக்கும் கிடைக்காத பேறு.

இளமையில் கடலூர் காங்கிரஸ் எம்.எல்.ஏ. மகளாகிய கண்ணம்மாவைத் திருமணம் செய்து கொண்டார். இவரது மறைவிற்குப்பின் 1948 ஆம் ஆண்டு பத்மாவதி என்பவரை கலப்புத் திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு குமுதா, உஷா, உமா என்ற மகள்களும் மணிக்குமார் என்ற மகனும் பிறந்தனர்.

பெரியாரோடு இணைந்து வைக்கம் போராட்டம், சுசீந்திரம் தீண்டாமை இயக்கம் ஆகியவற்றில் ஈடுபட்டு தீண்டாமைக்கு எதிராகப் போராடியவர் ஜீவா. மாவீரன் பகத்சிங் தூக்கிலிடப்பட்ட காலக் கட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட தூக்கு தண்டனைக்கு எதிராக வெகுண்டெழுந்தார். அனல் கக்கும் பேச்சால் அன்றைய இளைஞர்களின் மனதில் புரட்சிக் கனலை மூட்டினார். சிறையிலிருந்தபடி பகத்சிங் தன் தந்தைக்கு எழுதிய 'நான் ஏன் நாத்திகனானேன்?' எனும் நூலை தமிழில்

மொழி பெயர்த்தார். அதை வெளியிட்டவர் பெரியார். பரபரப்பான இந்த நூலை வெளியிட்டதற்காக, ஜீவாவின் கை கால்களை கட்டி விலங்கிட்டு, திருச்சி முழுவதும் வீதி வீதியாக இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர் காவல்துறையினர்.

1930 களில் தன்னை சுயமரியாதை இயக்கத்தினராக அடையாளப்படுத்திக் கொண்ட ஜீவா, காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுக் கம்யூனிஸ்ட் தோழர்களுடன் சிறை சென்றார்.

கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்ட காலத்தில் (1939--1942) பம்பாயிலும் சிறையிலும் தன் பெரும்பகுதியை செலவிட்டார். 1948-ல் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது இலங்கைக்குச் சென்று செயலாற்றினார்.

1952- ம் ஆண்டு வண்ணாரப்பேட்டை தொகுதியில் இருந்து சட்டமன்றத்திற்கு தேர்வு செய்யப்பட்டார். சட்ட மன்றத்தில் தனது பேச்சால் மற்ற தலைவர்கள் அனைவரையும் கவர்ந்தார் ஜீவா. அதுவரை பொதுமக்களைக் கவர்ந்த ஜீவாவின் பேச்சால், தலைவர்களும் ஈர்க்கப்பட்டனர். எதிராளியையும் பேச்சால் தன் வசப்படுத்தும் தனித்துவம் மிக்கவராக ஜீவா விளங்கினார். ஜீவா சட்டமன்றத்தில் நிகழ்த்திய உரை "சட்டப்பேரவையில் ஜீவா" என்று நூலாகவும் வெளிவந்துள்ளது.

எதிரணியில் இருந்தாலும் அனைத்துத் தலைவர்களுடனும் நட்பு பாராட்டியவர் ஜீவா. காமராஜரால் பெரிதும் மதிக்கப்பட்டவர். நகைச்சுவை மேதை கலைவாணரின் பெருமதிப்பிற்குரியவராக ஜீவா இருந்தார். தலைமறைவு வாழ்க்கையில் ஜீவாவின் பெரும்பகுதி நேரம் கலைவாணரின் பாதுகாப்பில் கழிந்தது.

இலக்கியத்தின் பால் தீராத தாகம் கொண்ட ஜீவா, தனது இறுதிக் காலத்தில் கலை இலக்கியப் பெருமன்றத்தைத் துவக்கினார் . இலக்கியத்தை மையப்படுத்தி 'தாமரை' இலக்கிய இதழைத் தொடங்கினார். 'ஜனசக்தி' நாளிதழையும் தொடங்கினார்.

தன் இறுதிக்காலம் வரை மக்களிடையே வாழ்ந்த ஜீவா, வறுமையிலேயே கழித்தார். ஜீவாவின் இறுதிக்காலம் வறுமையிலேயே கழிந்தது. ஒருமுறை அப்போதைய முதல்வர் காமராஜர் சென்னையில் ஜீவா வசித்துவந்த பகுதியில் ஒரு அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். காமராஜரின் உதவியாளர், திறப்பு விழா நடக்கும் இடத்தின் அருகேதான் ஜீவாவின் வீடு இருப்பதாக போகிற போக்கில் சொல்ல அதிர்ந்தார் காமராஜர். காரணம் அது ஒரு குடிசைப்பகுதி.

நிகழ்ச்சி முடிந்து ஜீவாவின் வீட்டுக்கு சென்ற காமராஜர், அவரது எளிமையான வீட்டைக் கண்டு இன்னும் அதிர்ந்துபோனார். அத்தனை சாதாரணமாக இருந்தது அந்த வீடு. அலுவலகம் திரும்பிய காமராஜர் உடனடியாக ஜீவாவிற்கு விடுதலைப் போராட்ட வீரர் ஒதுக்கீட்டில் அரசு வீட்டை ஒதுக்கும்படி உத்தரவிட்டார். ஆனால் ஜீவா அதை ஏற்க மறுத்தார்.

"என் வாழ்நாள் முழுவதும் இந்த பாட்டாளி மக்களுக்காக உழைத்தேன். என் இறுதிக்காலமும் அத்தகைய மனநிலையிலேயே கழிய வேண்டும். அவர்களிடமிருந்து என்னை தனித்துக்காட்டும் எந்த விஷயமும் எனக்கு தேவையில்லை" என மறுத்தார் நேர்மையாளர் ஜீவா.

இத்தனை மக்கள் ஆதரவுடனும் பெரும்தலைவர்களுக்குப் பிடித்தமானவராக இருந்தாலும், தூய்மையான தலைவனாக எளிமையாகவும் இறுதிவரை நேர்மையாக தன் பொதுவாழ்வினை அமைத்துக்கொண்டார் தோழர் ஜீவா.

உடல்நலம் குன்றிய நிலையில் கடந்த 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18- ம் நாள் இயற்கை எய்தினார் ஜீவா. ஜீவாவின் பொன்னுடலுக்கு கட்சி மாச்சர்யமின்றி தலைவர்களும், பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர். பின்னாளில் மத்திய அரசு அவர் தபால் தலையை வெளியிட்டு கவுரவம் செய்தது.

மதமும் மனித வாழ்வும், புதுமைப் பெண், மேடையில் ஜீவா, தேசத்தின் சொத்து, கலை இலக்கியத்தின் புதிய பார்வை ஆகியவை ஜீவா தொடர்பான நூல்கள்.

இவரது நினைவாக கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மணிமண்டபம் அமைத்து பெருமை சேர்த்துள்ளது தமிழக அரசு. புதுச்சேரியில் இவரது நினைவாக அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஜீவானந்தம் என பெயரிட்டது புதுவை அரசு. பாட்டாளிகளின்

குரலாய் ஒலித்த தோழர் ஜீவாவின் வாழ்வு என்றும் மக்களிடையே சிறந்து விளங்கும்.

ஜீவாவின் மறைவு குறித்து கே.பி. ஜானகியம்மாள்.....

"ஜீவா அவர்கள் மறைவின்போது நானும் பொன்மலை பாப்பாவும் வேலூர் சிறையில் இருந்தோம். 19.01.1963 அன்று பிற்பகல் விடுதலை செய்யப்பட்டோம். வெளிவந்தபின்னர்தான் ஜீவாவின் மறைவுச் செய்தியைப்படித்தோம். செய்திஎங்களை

திக்பிரமையடையச் செய்தது. கால்கள் ஒரு அடி எடுத்து வைக்க முடியவில்லை. கண்ணீர் விட்டோம். இறுதி யாத்திரைக்குச் சென்றுவிடலாம் என்று துடித்தோம். இரயில்வே ஸ்டேஷனுக்கும் பஸ் ஸ்டாண்டிற்கும் அடைந்தோம். குறித்த நேரத்தில் போய்ச் சேரும்படியான போக்குவரத்துகிடைக்காத காரணத்தால் ஜீவா முகத்தைக் காணக் கிடைக்கவில்லை. சென்னைக்கும்செல்லவழியில்லை. மதுரைக்கும்வரமனமில்லை.

என்னைப் பொதுவாழ்வில் பங்கேற்க வைத்த தியாகச் சுடரை இறுதி முறையாகக் காணும் வாய்ப்புக்கூட கிடைக்கவில்லை. கண்கள் கலங்கினர். அவரது அரும்பெரும் சேவைகள் இதயத்திரையில் உருண்டோடி வந்தன. என்னைப்பொறுத்தவரையில் ஜீவா மறைந்தார் என்று எண்ணவில்லை. என்று எண்ணவும் மாட்டேன். அவர் என்றும் நமக்கு வழிகாட்டிக் கொண்டு தானிருக்கிறார்"

கே.பி. ஜானகி அம்மாவின் வார்த்தைகள் அனைவருக்கும் தானே...

*(ஜீவா நினைவு நாள் ஜனவரி 18)* ●

**திருத்தம்**

சென்ற மாத (டிசம்பர் 2022) அரசு ஊழியர் இதழில் 17 ஆம் பக்கத்தில் இடம் பெற்றிருந்த **"டிசம்பர் இருபத்தைந்து"** கவிதையை எழுதி இருந்தது தோழர் பெரணமல்லூர் சேகரன். ஆனால், அது வேறு பெயரில் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது தவறு சுட்டிக் காட்டப்பட்டதும் அது சரி செய்யப்பட்டு சில ஆயிரம் இதழ்களில் சரியான பெயருடன் பிரசுரம் செய்யப்பட்டது. எனவே வாசகர்கள் மேற்படி கவிதையை எழுதியது தோழர் **பெரணமல்லூர் சேகரன்** என்பதை திருத்தி வாசிக்க கேட்டுக்கொள்கிறோம்

- ஆசிரியர் குழு




நீங்க ஒரு வாசகம் சொன்னாலும் அது திருவாசகம் தான்!

'அரசியல் வாதம் எனும் நம்பிக்கை துரோகம்' தலைவர் மடல் கொஞ்சம் காரமாகவே இருந்தது இந்த காரம் இன்றைய சூழலுக்கு தேவையானது தான்.

**- வேலு, வண்ணாரப்பேட்டை**

இன்றைய அரசு ஊழியர்களின் நிலையை தெள்ளத் தெளிவாகவும், ஆட்சியாளர்களின் அடாவடிகளை துல்லியமாகவும், இந்த மாத அட்டைப்பட கார்டூனைபோல் வேறு எதனாலும் இவ்வளவு சிறப்பாக விளக்கி இருக்க முடியாது .

**- வி. ஆனந்தன், கோவில்பட்டி**

பொதுச்செயலாளர் மேசை வளவளவென்று இல்லாமல் இம்முறை 'நச்'சென்று 'கெத்'தாக இருந்தது.

**- மணிமேகலை மணியன், திருச்சி**

'டீ வித் காம்ரேட்' நாங்கள் கவனிக்கத் தவறிய நாட்டு நடப்புகளை சுடச்சுட எடுத்து வைத்தது அருமை.

**- கோகுல கிருஷ்ணா, திண்டுக்கல்**

கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும், அரசுடைமை ஆக்கும் அவுட்சோர்சிங் அரசாணைகள் 115, 139, 152 ஆகியவற்றை நமக்காக நாம் எதிர்க்கவில்லை, எதிர்கால சந்ததியினர் அரசுப்பணிகளில் இருக்க வேண்டியதன் அவசியம் உள்ளதை கோடிட்டு காட்டியது அவுட்சோர்சிங் கட்டுரை.

**- நாகராஜன் பத்மாவதி, மடிப்பாக்கம்.**

'நிதி அமைச்சரின் சமூக நீதி' கடிதம் அவர் எத்தகைய சமூக அநீதியை செய்து வருகிறார் என காட்டியது.

**- முகமது சபி, திருவண்ணாமலை.**

குணாவின் ஊழியர் நடத்தை விதிகள் 2027 குறுங்கதை அரசு ஊழியர்கள் இன்னும் உக்கிரமாக போராடாமல் இருந்தால் என்ன நிலை ஏற்படும் என்பதை சொல்லாமல் சொல்லியது மிக்க நன்றி.

**- ஆரோக்கியமேரி, அனகாபுத்தூர்**

இந்த இதழில் (டிசம்பர் 2022) இடம்பெற்றிருந்த அனைத்து ஜோக்குகளும் சிரிக்க மட்டுமல்ல சிந்திக்கவும் வைத்தது.

**- கணேசன் மைந்தன், பெரியபாளையம்**

தோழர் தெ. வாசுகியின் 'நம் பொறுமைக்கும் எல்லை உண்டு' கட்டுரையில் சொல்லியுள்ள History repeats itself நிச்சயம் நிகழும்.

**- சுலோசனா சுகுமாரன்.**

# மாற்றங்கள் விளையாவிட்டால் ஆட்டங்களை மாற்றியமைப்போம்!

**மு.அன்பரசு**
மாநில தலைவர்

அன்பிற்கினிய தோழர்களே! முக்கனியின் முதற்கனியாம் மாங்கனி விளையும் சேலத்தின் திருமண்ணில் வெற்றிக்கனிக்கு வித்தாக நடைபெறும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப்பேரவையை எழுச்சியுடன், சிறப்புடன் மட்டுமல்லாமல் நேர்த்தியாக நடத்திவரும் எமதருமை வரவேற்புக்குழு நிர்வாகிகளே! தோழமை சங்க மற்றும் துறைவாரி/ பிரிவுவாரி சங்கங்களின் நிர்வாகிகளே!

மரியாதைக்குரிய பேரவையின் தலைமைக்குழு மற்றும் வழிநடத்தும் குழு தோழர்களே!

தோழமை வாழ்த்துக்களை தெரிவிக்க வந்திருக்கும் விருந்தினர்களே, சிறப்பு அழைப்பாளர்களே உங்கள் அனைவரையும் தோழமை வாழ்த்துக்களை உரித்தாக்கி அன்புடன் வரவேற்கின்றேன்.

அரசின் நலத்திட்டங்களோ அரசு ஊழியர்களின் உரிமைகளோ சமூக நீதியோ, மக்கள் நலனோ எது ஒன்றும் மக்களுக்கும் ஊழியர்களும் சொன்னபடி போய் சேர்கிறதா என்பதை கவனித்து தவறுகளை அரசுக்கும் மக்களுக்கும் எடுத்துரைக்கும் இயக்கத்தின் தளபதிகளாகிய மாநில செயற்குழு உறுப்பினர்களே, மகளிர் துணைக்குழு தோழர்களே, நிர்வாகிகளே,

மாநில மையத்தின் சுட்டுவிரல் அசைவினை எட்டுத்திக்கும் எடுத்துச்சென்று பட்டி தொட்டிகளில் எல்லாம் நம்முடைய போர் பிரகடனத்தை, உரிமை முழக்கத்தை கடைகோடி ஊழியனுக்கும் கொண்டு சேர்க்கும் மாவட்ட, வட்ட மைய நிர்வாகிகளே,

பூப்பறிக்கவும் தெரியும் போர் தொடுக்கவும் தெரியும் என்று ஆட்சியாளர்களுக்கு நினைவூட்ட வந்திருக்கும் தோழியரே. தலைமையின் வார்த்தைக்காக கட்டுப்பட்டு நெறிபிறழ்ந்த அரசியல் நிகழ்வுகளை சகித்துக்கொண்டு எப்போது போர்க்களம் போகப்போகிறோம் என்று ஆணைகளுக்காக அணைகட்டி ராணுவ ஒழுக்கத்தோடு காத்திருக்கும், அரசு ஊழியர் இயக்கத்தை கட்டிக்காக்கும் பிரதிநிதி தோழர்களே... உங்கள் அனைவருக்கும் புரட்சிகர வாழ்த்துக்களை சொல்லிக்கொண்டு எனது தலைமையுரையைத் தொடங்குகிறேன்.

தோழர்களே! நமக்கு போர் புதிதல்ல! போராட்ட களமும் புதிதல்ல! மாற்றங்கள் விளையாவிட்டால், ஆட்டங்களை மாற்றி அமைப்போம்!

ஒரு இயக்கம்... அமைப்பு..சங்கம்... என்பது எப்போதும் உயிரோட்டமாக இருக்க வேண்டும். அது நிகழ்காலப் பிரச்சினைகளின் வாசல்களைத் திறந்து விட வேண்டும். மினுக்கும் சிறு விளக்காய் இன்றி சமூக வாழ்வுக்கு வெளிச்சம் தரும் தெரு விளக்காய் நின்று ஒளி தர வேண்டும்.

நவீன வாழ்க்கையின் பிரச்சனைகளையும், நசிவுகளையும், காலத்தின் கனமான தேவைகளையும் உணர்ந்து செயல்படக்கூடிய வல்லமை இல்லாத இயக்கத்தை காலம் தன் தோள்களில் தூக்கிச் சுமப்பதில்லை,தன் கைப்பிடித்துக் கொண்டு தன்னோடு இணைத்து பயணிக்காத இயக்கத்தை காலம் பாதி வழியிலேயே விட்டுவிட்டு தன் பயணத்தை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

காலத்தின் பெரும் பயணத்தில் பின்தங்கிவிடாமல் இருக்க இடைவிடாத போராட்டங்களின் மூலம் இயக்கம் தன்னை புதுப்பித்துக் கொண்டே இருக்க வேண்டும். போராடுவது இன்றைய காலகட்டத்தில் அமைப்பு ரீதியாக உள்ள உழைக்கும் வர்க்கத்தின் தவிர்க்க முடியாத கடமையாகியுள்ளது.

உழைக்கும் வர்க்கம் போராடாமல் எந்த உரிமையையும் பெற முடியாது என்ற நிலைமை மாறி இப்போது, போராடாமல் விட்டு விட்டால் இருக்கும் உரிமைகள்கூட பறிபோய்விடும் என்ற நிலைமை உருவாகியுள்ளது. அமைப்பு ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட உழைப்பாளி வர்க்கம் போராடாவிடில் அதன் தரம் தாழ்ந்து விடுவதோடு,

ஒட்டுமொத்த சமூகமும் முன்னேற்றமின்றி தாழ்ந்து அழியும்.

எனவே, சமரசமற்ற தொடர் போராட்டங்களை நடத்திட வலுவான இயக்கத்தை கட்டி அமைப்பதே நமது முதற் கடமையாகும் அவ்வாறு கட்டியமைக்கப்பட்ட இயக்கத்தின் தடங்கலற்ற செயல்பாடுகளுக்கு ஏதுவாக அது குறித்த ஆய்வுகளையும் கருத்தாடல்களையும் மேற்கொள்வது அவசியமும் அத்தியாவசியமுமான கடமையே ஆகும்.

இயக்கம் குறித்து நம்முடைய ஆசான் தோழர் எம்.ஆர்.அப்பன் கூறியுள்ளதை உற்று கவனிப்போம்:

"ஒரு இயக்கத்தின் கீழ் அணிதிரள வேண்டியதும் மற்ற பகுதி உழைப்பாளி மக்களை அணிதிரட்ட வேண்டியதும் வரலாற்றுக் கடமையாகும். உழைக்கின்ற தொழிலாளர்கள் அல்லது ஊழியர்கள் தாங்களாகவே விரும்பி ஒன்றிணைந்து அமைத்துக் கொள்ளும் அமைப்புதான் சங்கம் அல்லது தொழிற்சங்கம் அல்லது இயக்கமாகும். அன்றாடம் வெடித்துக் கிளம்பும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், உடனடிப் பொருளாதாரக் கோரிக்கை களுக்காகவும் போராடி தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் கருவி மட்டுமா சங்கம்? இல்லை. உழைக்கும் வர்க்கத்தினுடைய வர்க்க உணர்வை வளர்த்தெடுப்பது, அவர்கள் சமூக மாற்றத்திற்கான வரலாற்றுக் கடமையை செயல் நோக்கத்தை கற்றுக் கொள்ளும் தொடக்கப் பள்ளிக்கூடமாகவும் இந்த தொழிற்சங்க இயக்கம் விளங்க வேண்டும்.

உடனடித் தேவைக்காகவும், கோரிக்கைகளுக்காகவும் நடத்தும் போராட்டங்கள் அனைத்தும் சமூக மாற்றத்திற்காக நடத்தப்படும் நெடிய போராட்டத்தின் ஒரு பகுதியே.

தொழிற்சங்கத்திற்கு ஒரு வரலாற்றுக் கடமையுண்டு அந்தக் கடமையை நிறைவேற்ற திறமை வாய்ந்த தலைமை தேவை. உணர்வுள்ள - போர்க்குணமிக்க தொண்டர்கள் தேவை. முழுமையான ஜனநாயக ரீதியான நடைமுறை தேவை எத்தகைய தடைகள் ஏற்பட்டாலும், அவைகளை உறுதியுடனும், நிதானமாகவும், விடாமுயற்சியோடும், தியாக மனப்பான்மையோடும் எதிர்கொண்டு "வெற்றி"யைப் பறித்தெடுக்க வேண்டும்"என்று தோழர் எம்.ஆர்.ஏ.கூறியுள்ள வார்த்தைகள் எத்தனை நிதர்சனமானவை.இவை எப்போதும் நாம் நம் நெஞ்சில் பொறித்திருக்கத் தகுந்தவை.

உலகின் எந்த உழைக்கும் வர்க்கமும் அதன் உரிமைகளை இலகுவாக பெற்று விட்டதாகவோ அல்லது எந்த முதலாளித்துவமோ/அரசாங்கமோ உழைக்கும் வர்க்கத்தின் நிலை உணர்ந்து அவற்றின் உரிமைகளை தாராளமனதுடன் தந்து விட்டதாகவோ எந்த வரலாறும் இல்லை.

அரசு ஊழியர்கள் சங்கம் அமைத்த வரலாறும், தொழிற்சங்கங்கள் உருவான நோக்கங்களும் வேறு வேறானவை அல்ல. எப்பொழுதெல்லாம் உழைக்கும் மக்கள் ஒன்றுகூடி குரலெழுப்புகிறார்களோ அப்போதெல்லாம் தொழிலாளர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன என்பது வரலாறு சொல்லும் பாடமாகும். நாம் அவ்வப்போது தனித்தனியாக போராடுகிறோம். பொதுவான போராட்ட களம் அமையும் போது கூட்டுப் போராட்டங்களில் ஈடுபடுகிறோம். ஒன்றிணைந்து போராடுவதன் மூலம் நம்முடைய கோரிக்கைகளும், உரிமைகளும் பன்மடங்கு வலுப்பெறுகின்றன. நம்முள் சிலர் இந்த வரலாறுகள் தெரியாமல் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி அல்லது சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக சங்கத்திற்கு எதிரானவர்களாக மாறி அரசியல் கட்சிகளின் சூழ்ச்சி வலைக்குள் விழுந்து நம்முடைய ஒற்றுமையை சீர்குலைக்க முயல்கிறார்கள். இன்றும் அதுபோன்ற நிகழ்வுகள் சாதி, மத அடிப்படையில் முளைவிட ஆரம்பித்துள்ளன. அதை நாம் அண்டவிடாமல் ஆரம்ப கட்டத்திலேயே வேரோடு கிள்ளி எறிய வேண்டிய பொறுப்பும் கடமையும் நம்முன் எழுந்துள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இன்று அரசியலில் ஒதுக்கி வைக்க முடியாத ஒரு அங்கமாக இருக்கிறது என்றால் அதற்கு காரணம் ஊழியர்கள் ஒற்றுமையும், பக்கபலமும்தான். அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் ஊழியர்களுக்கு எதிரான மனோநிலை, உரிமைகளை மறுக்கும் சர்வாதிகார மனப்பான்மை, சொன்ன சொல்லை காப்பாற்ற விரும்பாத கயமைத்தனம், போன்றவற்றிற்கு நாம் தக்க பாடம் புகட்டி அவர்களை ஆட்சிக் கட்டிலில் இருந்து தூக்கியெறியக் காரணமாக இருந்துள்ளோம். உங்களுடைய 6 சதவீத வாக்குகள் எனக்குத் தேவையில்லை அது இல்லாமலேயே நான் ஜெயித்துவிடுவேன் என்று சவால் விட்ட ஒரு

ஆட்சியாளரை 2006ம் ஆண்டு தேர்தலிலும், அரசு ஊழியர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காமலும், அவர்களை அழைத்துப் பேசாமலும் உரிமைகளைத் தராமலும் டெண்டர் ஆட்சி நடத்திய இன்னொரு ஆட்சியாளரை 2021ஆம் ஆண்டுத் தேர்தலிலும் வீட்டுக்கு அனுப்பி வைத்த நிகழ்வுகள் நாம் யார் என்பதை ஆட்சியாளர்களுக்கு உணர்த்திய வரலாற்றுச் சுவடிகளாகும்.

நாற்பது ஆண்டு கால கோரிக்கையான மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் என்பதை நம்முடைய சங்கத்தை ஸ்தாபித்த நான்காம் ஆண்டிலேயே நாம் செயல்படுத்திக் காட்டியுள்ளோம். அரசு ஊழியர் சங்கம் உருவாவதற்கு முன்பு அரசாங்கத்திற்கு முரண்பட்டவர்களாக அரசு ஊழியர்கள் தெரிந்தார்கள். அதுவே அரசு ஊழியர் சங்கம் வந்தபின் அத்தனை அரசு ஊழியர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் இயக்கமாக பிரச்னைகளின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு உடன்பட்ட அல்லது முரண்பட்ட சங்கமாக நமது சங்கம் இருந்து வருகிறது. இன்றைய நிலையில் அரசு ஊழியர்களின் உரிமைகளில் அரசாங்கம் அவ்வளவு எளிதாக கைவைத்துவிட முடியாத அளவுக்கு ஊழியர்களின் பாதுகாப்பு அரணாக உள்ளது என்றால் அது முழுக்க முழுக்க ஒவ்வொரு அரசு ஊழியரும் இந்த இயக்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாகத்தான் என்பதை நிர்வாகிகள் அனைவரும் உணரத் தவறவில்லை.

கடந்த இருபது ஆண்டுகாலமாக நம்முன் உள்ள மிகப்பெரிய பிரச்னைகளில் ஒன்று பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப அமல் படுத்துவது என்பதாகும். அந்த கோரிக்கை மட்டுமல்ல அதைப்போல பல கோரிக்கைகள் 15 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன. தனிச் சங்கமாகவும் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்புடன் இணைந்தும் புதிய பென்சன் திட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், காலிப்பணியிடங்களை நிரப்பிடக் கோரியும், சத்துணவு அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர், ஊர்ப்புற நூலகர், MRB செவிலியர் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம், ஓய்வூதியம், ஊராட்சி செயலாளர்களுக்கு கருவூலம் மூலம் மேம்படுத்தப்பட்ட ஊதியம், சாலைப் பணியாளர்களுக்கு 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக சேர்ப்பது அரசுத்துறைகளில் உள்ள கொத்தடிமை கூலிமுறைகளை ரத்து செய்து நிரந்தரப் பணியாளர்களை நியமித்தல் போன்ற கோரிக்கைகளுக்காக தொடர்ந்து இயக்கங்களும், மாநாடுகளும், மாநில அளவில் அனைத்துதுறை ஊழியர்களையும் இணைத்துக்கொண்டு போராட்டங்களையும் நடத்தி வருகிறோம்.

இந்த அரசாங்கம் இதுவரை நம்முடைய உரிமைகளை, கோரிக்கைகளை புறந்தள்ளவில்லை. என்றாலும் காத்திருத்தல் என்பதற்கான எல்லைதாண்டி நாம் பொறுமையுடன் இருப்பது அரசாங்கத்திற்கு பணிந்து போவதான தோற்றத்தை புறவெளியில் உருவாக்கிவிடும் என்பதையும் நாம் உணர்ந்தே இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜாக்டோஜியோ மாநாட்டில் தன்னுடைய வாயாலேயே தான் ஆட்சிக்கு வந்ததற்கு முக்கிய காரணமாக இருந்தது நாம்தான் என்று ஒப்புரை வழங்கியதும், ''உங்களுடைய கோரிக்கைகளை நான் மறக்கவும் இல்லை மறுக்கவுமில்லை, மறைக்கவுமில்லை, நிதி நிலைமை சரியானதும் கண்டிப்பாக நிறைவேற்றுவேன்.'' என்று தெரிவித்தும், அதன்பிறகு சில மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்றுவரை குறைந்தபட்சமாக அகவிலைப்படி, சரண்விடுப்பை பணமாக்கிக் கொள்ளும் கோரிக்கைகளைக்கூட நிறைவேற்றாமல் உள்ளது முதல்வரின் வார்த்தைகளின் மீதான நம்பகத்தன்மையை நொறுங்க வைத்துள்ளது. போர் நமக்கு புதிதல்ல. போராட்டகளமும் நமக்கு புதிதில்லை. களத்தில் சென்றுதான் உரிமைகளைப் பெற வேண்டும் என்றால் அதற்கும் நாம் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்.

இந்த மாநில பிரதிநிதித்துவப் பேரவை நம்முடைய உரிமைகளை மீட்பதற்கான இயக்கங்களை முன்னெடுக்கக்கூடிய போர்ப் பாசறையாக இருக்கும். நம்முடைய வீறு கொண்ட போராட்டங்கள் புதிதாக பிறக்கும் 2023ஆம் ஆண்டை உரிமை மீட்புக்கான ஆண்டாகவும், சமூகநீதியை நிலை நாட்டும் ஆண்டாக மலர்வதும் மாறுவதும் அரசின் கரங்களில் உள்ளது. இந்தப் பேரவையில் நாம் மேற்கொள்ளும் ஆக்கபூர்வமான முடிவுகளும் நடவடிக்கைகளும் ஆட்சியாளர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இருக்க

**சீனா, அமெரிக்கா நாடுகளில் கொரோனா பரவல் அதிகரிப்பு மாநிலங்களை உஷார் படுத்தி ஒன்றிய அரசு கடிதம் – செய்தி**



"என்னப்பா இது... மறுபடியும் லாக்டவுன் வந்துடும் போலருக்கு?"

"கவலை படாதீங்க குரு. சலூன்களையும், டீக்கடைகளையும் மட்டும்தான் மூடுவாங்க. டாஸ்மாக்கையெல்லாம் மூடமாட்டாங்க.

வேண்டும் என்ற முனைப்பில் ஆட்சியாளர்களின் அரசியலையும், பொருளாதார கொள்கைகளையும் உள்வாங்கிக் கொண்டு அதற்கொப்ப ஊழியர்களை ஒன்று திரட்டி நம் வலிமையை காண்பிக்க இந்த பேரவையினை முன்னோட்டக் களமாக மாற்றுவோம். நம்முடைய உரிமைகளை மீட்பதற்காக போராட்ட அறிவிப்புகளை முன்னெடுப்போம்.

மக்களை நோக்கிய பயணத்தில் நமது கடந்த 38 ஆண்டுகளில் நாம் கடந்து வந்த பாதையைப் பெருமிதத்துடன் திரும்பிப் பார்த்தாலும், நிகழ்கால கடமைகள் நம்மை மேலும் வலுவாகச் செயல்பட நிர்ப்பந்திப்பதை நினைவில் கொள்ள வேண்டியுள்ளது. மொத்தத்தில் மக்களுக்கான ஊழியர்களே அரசு ஊழியர்கள் என்ற பணிக் கலாச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு கடுமையாக முயற்சிக்க வேண்டியுள்ளது.

இக்கடமைகளை நிறைவேற்றிட அனைத்துப் பகுதி உழைப்பாளி மக்களையும் அணிதிரட்டிட நாடு தழுவிய அளவில் மட்டுமின்றி உலகு தழுவிய அளவிலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளில் நாம் அர்ப்பணிப்பு உணர்வுடன் பங்கெடுத்திட வரும் புதிய ஆண்டில் சபதமேற்போம். அதனை நிறைவேற்றிட வரும் 2023ஆம் ஆண்டில் தொடர் இயக்கங்களை நடத்தி ஊழியர்களின் உணர்வு மட்டத்தை சமூக, அரசியல் மற்றும் பொருளாதார தளங்களில் மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமானதாகும்.

ஊழியர்களின் உரிமைகளுக்காக மட்டுமின்றி மக்கள் பிரச்சினைகளுக்காகவும் போராடும் அமைப்பாக நமது சங்கத்தை இன்னும் முன்னெடுத்துச் செல்வோம். மொத்தத்தில் பிறக்கும் புதிய ஆண்டில் நமது சங்கம் திரட்டியுள்ள வலிமையை ஒட்டுமொத்த சமூகத்தின் மேம்பாட்டிற்காக நமது வல்லமையை இந்த மண்ணும் மக்களும் பயனுற வாழ்வதற்காகப் பயன்படுத்துவோம்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகள் அனைத்தையும் ஆட்சிக்கு வந்ததும் கண்டிப்பாக அமல்படுத்துவோம் என்று உறுதியளித்துவிட்டு அவற்றில் ஒன்றைக்கூட இன்றுவரை நிறைவேற்றாத நிலை என்பது ஒரு புறமிருந்தாலும் மற்றொரு பக்கம் சமூகநீதி, இடஒதுக்கீடு, வேலைவாய்ப்பின்மை, காலிப்பணியிடங் களை நிரப்பாமல் உள்ளது போன்ற பல பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்படும் என்று நம்பிக்கை விதைத்த திராவிடமாடல் அரசுதான் இன்று அரசுப் பணிகளையே தனியார் மயமாக்கும் வகையில் அவுட்சோர்சிங் முறையில் ஆளெடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாணை பிறப்பித்துள்ளது.

இதிலிருந்து இந்த ஆட்சி எவ்வளவு பெரிய நாடகமாடி நயவஞ்சக வலை விரித்து நம்பிக்கைத் துரோகம் செய்துள்ளது என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாம் நம்முடைய உரிமைகளை கேட்பதோடும் பெறுவதோடும் மட்டும் நம்முடைய கடமைகள் முடிந்துவிட்டதாக நினைப்பவர்கள் இல்லை. சமூக அக்கறைக்கான இயக்கங்களையும் முன்னெடுக்கிற இயக்கம்தான் இது. இன்று லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்புகள் இன்றி மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ள நிலையில் இந்த அரசு அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித்தர முன்வராமல் அரசு நிறுவனங்களில் அவுட்சோர்சிங் முறையில் ஆட்களை எடுக்க அரசாணை பிறப்பித்துள்ள செயல் திராவிடமாடல் ஆட்சியின் கயமைத்தனத்தை காட்டுவதாக உள்ளது என்று சொல்வதில் தவறில்லை என்றே தோன்றுகிறது. மாண்புமிகு முதல்வரின் இந்த செயலானது

சமூகநீதி, இடஒதுக்கீடு, இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் அரசுப்பணி ஆகியவற்றை முற்றிலுமாக ஒழித்துக்கட்டும் நடவடிக்கை என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. இன்று எந்தக்காலத்திலும் இல்லாத அளவுக்கு இந்த திராவிட மாடல் ஆட்சி அரசுத்துறைகளில் உள்ள பணியிடங்களை அவுட்சோர்சிங் என்ற வெளிமுகமை மூலம் தனியாரிடம் விட்டுவிடத் துணிந்திருப்பது சமூக நீதி, இட ஒதுக்கீடு, இளைஞர்களின் எதிர்காலம் போன்றவற்றுடன் அரசு ஊழியர் என்ற இனத்தையே அழித்தொழிக்கும் ஏற்பாட்டின் ஆரம்பம் என்பதை நாம் உணர வேண்டும். ஒருபுறம் கடந்த 38 ஆண்டுகளாக சத்துணவு மற்றும் அங்கன்வாடி உள்ளிட்ட ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டுமென்று நாம் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் இன்னொரு புறம் அரசு அரசு ஊழியர்கள் அனைவரையும் அத்துக்கூலிகளாக்கும் நடைமுறைகளை துவக்கியிருப்பதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஏற்கெனவே அவுட்சோர்சிங் மூலம் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ஆட்களை பணிக்கு எடுப்பதை உடனடியாக எதிர்வினையாற்றி எதிர்த்து நிறுத்தியிருப்பதோடு அரசாணை எண்கள். 115, 139, 152 போன்றவற்றை அடியோடு ரத்து செய்ய வேண்டும் என்று போராடிக்கொண்டிருக்கின்ற நாம் மக்களுக்கான, சமூக நீதிக்கான இளைஞர்களின் எதிர்கால வாழ்வுக்கான போராட்டங்களையும் உடனடியாக துவக்கியே ஆக வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

எனவே..

இனிமேலும் காத்திருந்தால் இழப்பதற்கு ஏதும் இல்லாமல் போய்விடும்! உரிமை மீட்புக்கான போரில் இடைவிடாத கடமையாற்றுவோம்! சமூக நீதி, சமஉரிமை காப்பதில் சமரசமின்றி போரிடுவோம்! வாழ்வாதார உரிமைகளை ஒன்றுவிடாமல் வென்றெடுப்போம்!

எப்படி கவிழ்த்து பிடித்தாலும் மேல் நோக்கியே எறியும் தீபந்தம் போல்''

நாம் எப்போதும் எதற்காகவும் அடிப்பணியாமல் உயர்ந்த சிந்தனைகளுடன் விட்டுக்கொடுக்காது உரிமைகளுக்காக கட்டுகோப்புடன் ஒன்றுபடுவோம்! போராடுவோம்! முன்னேறுவோம்! என்பதோடு எனது தலைமையுரையை நிறைவு செய்கிறேன்.

●

**சூதாட்டம் என்பது மகாபாரதம் போன்ற இதிகாசங்களிலேயே உள்ளது. அதனால் ஆன்லைன் ரம்மி விளையாட்டை உடனடியாக நீக்கி விட முடியாது, - அண்ணாமலை**



"களவு திருட்டு கூட மகாபாரத காலத்துல இருந்திருக்கு. அண்ணாமலை சார் எங்களையும் சப்போர்ட் பண்ணுங்க சார்."

**கர்நாடகா மகாராஷ்டிரா எல்லை பிரச்னை லாரி கண்ணாடிகள் உடைப்பு - செய்தி**



"அண்ணே ரெண்டு இடத்துலயும் அவங்க ஆட்சிதானே நடக்குது. ஏன் இப்படி சுண்டை போட்டுக்கறாங்க."

"இதுதான் ஒரே நாடு ஒரே ரோடுன்னு சொல்றவங்களோட லட்சணம்."

# உரிமை மீட்பு கடமையாற்ற அருமைத் தோழர்களே வருக! வருக!

**- கோ.சுகுமார்**

வரவேற்புக்குழு தலைவர்

அன்புத் தோழர்களே! வணக்கம்! சேலம் மாவட்டம் 1792ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தொன்மையான மாவட்டம் ஆகும். இது தமிழகத்தின் ஐந்தாவது பெரிய நகரமாகும். சேலம் மாவட்டத்திற்கென பல்வேறு சிறப்புகள் உண்டு. அவற்றிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையை நடத்திட 27 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் வாய்ப்பளித்த மாநில மையத்தை மனதார பாராட்டுகிறோம்.

சேலம் மாவட்டத்திலுள்ள ஏத்தாப்பூர் செப்பேட்டில் "சாலிய சேர மண்டலம்" எனக் குறிப்பிட்டது, சேரலம், சைலம் எனவும் பின்பு சேலம் எனவும் பெயர் மாற்றம் ஏற்பட்டது. சேலம் மாம்பழத்திற்கு பெயர் பெற்றது. தமிழகத்தைப் பொறுத்த வரை சேலத்தில் தான் நுகர்வோர் பொருட்கள் விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விலையே அனைத்து மாவட்டங்களிலும் கடைபிடிக்கப்படுகிறது.

சேலத்தின் முதன்மை மலைத்தொடர் சேர்வராயன் மலையாகும். மற்றும் இங்கு கல்வராயன், நகரமலை, கஞ்சமலை, தீர்த்தமலை, நைனாமலை, பச்சைமலை, சங்ககிரி, கபிலர் மலை, வத்தலமலை, மேலகிரி, குட்டிராயன் ஆகிய மலைகள் உள்ளன. இங்கு கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கோடாரிகள், தேய்ப்புக் கற்கள், பானைகள், சுத்திகள், வளையல்கள் போன்றவை கிடைத்துள்ளன. சேலம் மாவட்டம் நீண்ட காலம் மதுரை நாயக்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர் 1768ல் ஹைதர் அலி கட்டுப்பாட்டிற்கு சென்றது. 1799ல் லார்டு கிளைவ் கைப்பற்றி சேலத்திலுள்ள சங்ககிரி துர்க்கத்தை தலைமையிடமாகக் கொண்டு ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்தது. ஆங்கிலேயர்களின் இராணுவப் படைத்தளமாக சேலம் விளங்கியது. சேலம் மாவட்டம் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. இம்மாவட்டத்தை தர்மபுரி அதியமான்கள், சோழர்கள், கன்னடர்கள், நாயக்கர்கள், திப்புசுல்தான், ஆங்கிலேயர்கள் ஆகியோர் ஆட்சி புரிந்துள்ளனர். சேலம், நாமக்கல், தர்மபுரி ஆகிய ஒருங்கிணைந்த பகுதிகள், 1965ல் தர்மபுரி மாவட்டமாகவும், 1996ல் நாமக்கல் மாவட்டமாகவும் சேலத்திலிருந்து பிரித்து புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1937ல் சேலம் மாவட்டத்தில் தான் முதன் முதலில் மதுவிலக்கு அமுலுக்கு வந்தது. இம்மாவட்டத்தில் திப்பு சுல்தான் கட்டிய ஜமா மசூதி, தாரமங்கலம் கைலாசநாதர் கோவில் குமரகிரி கோவில், கந்தாஸ்ரமம், குரும்பபட்டி உயிரியல் பூங்கா, மேட்டூர் அணை, சேலம் உருக்காலை, ஏழைகளின் ஊட்டியென அழைக்கப்படும் ஏற்காடு, ஆகியவை சுற்றுலாவிற்கான இடங்களாகும். இங்கு காவிரி, மணிமுத்தாறு, வசிஷ்ட நதி ஆகியவை முக்கிய ஆறுகளாகும். மேலும், இங்கு மேட்டூர் (ஸ்டான்லி) நீர்த்தேக்கம், ஆனைமடுவு, கரியகோவில் ஆகிய அணைகள் உள்ளன. சேலத்தில் விவசாயம், காடு, கனிமப் பொருள், துணியாலைகள், பொறியியல், வேதிப்பொருள் ஆகியன சார்ந்து மொத்தம் 1112 தொழிற்சாலைகள் உள்ளன.

இம்மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் வேளாண்மை செய்யப்படுகிறது. இங்கு நெல், கரும்பு, வாழை, பருத்தி, சோளம், மாம்பழம், காப்பி, பாக்கு, நிலக்கடலை, வெற்றிலை, மரவள்ளிக் கிழங்கு ஆகிய பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலேயே அதிகமான பருத்தி ஆடைகள் இங்கு நெய்யப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் சேலைகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதோடு, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள மொத்த கால்நடைகளில் ஏழு சதமான கால்நடைகள் இம்மாவட்டத்தில் வளர்க்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் பொட்டனேரியில் செம்மறி ஆடு இனப்பெருக்க ஆராய்ச்சி மையம் உள்ளது. இந்தியாவில் மாக்னசைட் தாது பெருமளவு கிடைக்குமிடங்களில் சேலமும் ஒன்றாகும். அதே போல் இந்தியாவிலேயே அதிகமான ஜவ்வரிசி சேலத்தில் உற்பத்தியாகிறது.

சேலம் மாவட்டத்தில் சங்ககிரியில் இந்தியா சிமெண்ட், மேட்டூரில் இரசாயன பொருட்கள், அலுமினியம் முலாம் பூசல், சந்தன எண்ணெய், வனஸ்பதி ஆகியவை தயாரிக்கும்

தொழிற்சாலைகளும், இரும்பு ஆலையும் உள்ளன. இம்மாவட்டத்தைச் சேர்ந்த இராஜாஜி சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் ஆவார். எஸ்.பி. ராமசாமி சுதந்திரத்திற்கு முந்தைய மத்திய அமைச்சர். அதே போல் மோகன் குமாரமங்கலம் சுப்பராயன் முன்னாள் மத்திய அமைச்சர் ஆவார்.

டாக்டர் குருபாதம் இராஜாஜி அமைச்சரவையின் உறுப்பினர் ஆவார். சேலத்தில் தமிழ்ச் சங்கம் உருவாகக் காரணமாக இருந்தவர் முன்னாள் அமைச்சர் மறைந்த க. இராசாராம் ஆவார். அதே போல இசையுலகில் நாதஸ்வர மேதை நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், இசையரசி சேலம் ஜெயலட்சுமி ஆகியோர் இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இம்மாவட்டத்தில் பெரியார் பல்கலைக் கழகம் உள்ளது. இதன் கட்டுப்பாட்டில் சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சார்ந்த கல்லூரிகள் உள்ளன.

சேலம் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் பணியாற்றிய முன்னணித் தோழர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய ஒருங்கிணைப்பில் 1984ம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடங்கப்பட்டது. அரசு ஊழியர் சங்கம் துவங்கப்பட்டது முதல் தோழமை தொழிற்சங்க அமைப்புகளோடும், துறைவாரி சங்கங்களோடும், அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம், ஆசிரியர் அமைப்புகளோடும் நல்லுறவு கொண்டு பல போராட்டங்களை நடத்தி வந்துள்ளது. அதே போல் மத்திய-மாநில அரசுகளின் தவறான கொள்கைகளை எதிர்த்து இந்திய தொழிற்சங்க மையம் போன்ற தொழிற்சங்கங்களோடு இணைந்து பல போராட்டங்களில் பங்கேற்றும், நடத்தியும் வந்துள்ளதென்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம்.

அரசு ஊழியர் உரிமைகளுக்காகவும், மத்திய-மாநில அரசுகளின் தவறான கொள்கைகளை எதிர்த்து நீண்ட, நெடிய போராட்டங்களில் பங்கேற்று, பல விழுப்புண்களை தாங்கிய தலைவர்கள் தமிழகம் முழுவதிலுமிருந்து சேலம் மண்ணுக்கு வந்திருப்பது எங்களுக்கு மிகுந்த உத்வேகத்தை அளிக்கிறது. உங்களுக்கு சேவையாற்றும் வாய்ப்பினை எண்ணி நாங்கள் பேர் உவகை கொள்கிறோம். 1953ம் ஆண்டில் நாடு தழுவிய அளவில் நடைபெற்ற விவசாயிகளின் நில மீட்பு பேராட்டத்தில் பங்கேற்ற தமிழகம், கேரளம், ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களை சார்ந்த தலைவர்களை கைது செய்து சேலம் சிறையில் அடைக்கப்பட்டு, அவர்களை குற்றவாளிகளைப் போல் சிறைச்சாலையில் நடத்தியதைக் கண்டித்து, சிறைக்குள் நடைபெற்ற போராட்டத்தின் போது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் இரத்தம் சிந்தி தங்களின் இன்னுயிரை ஈந்தனர். அத்தகை தியாக பூமியான சேலத்தில் வாழ்வாதார உரிமைகளை மீட்டிட, தேவைப்பட்டால் முட்டி, மோதிட திட்டமிடவும், அதற்கான வியூகங்கள் வகுத்திடவும் கூடும் இந்தச் சிறப்பு வாய்ந்த மாநில பிரதிநிதித்துவப் பேரவை கூட்டத்திற்கு தலைமை பொறுப்பேற்றுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர். மு.அன்பரசு அவர்களே... இப்பேரவை கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றவுள்ள அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர். ஏ. ஸ்ரீகுமார் அவர்களே... வேலை மற்றும் ஸ்தாபன அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர். ஆ.செல்வம் அவர்களே... வரவு செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ள மாநில பொருளாளர் தோழர். மு.பாஸ்கரன் அவர்களே... தீர்மானங்களை முன் மொழியவுள்ள மாநில நிர்வாகிகளே போராட்ட களத்தில் மட்டுமல்ல இதுபோன்ற கூட்டங்களிலும் எங்களின் பங்கேற்பு இருக்குமென தோழமை உரையாற்றிட வருகை தந்துள்ள தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் தலைவர் தோழர். கு.வெங்கடேசன் அவர்களே... தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநிலத் தலைவர் தோழியர். மூ.மணிமேகலை அவர்களே... நிறைவுரை ஆற்றிட வருகை தந்துள்ள, தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர். பி.கிருஷ்ணமூர்த்தி அவர்களே... தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர்களே... மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினர்களே... மாநிலம் முழுவதிலும் இருந்து வருகைபுரிந்துள்ள மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்களே... இந்தப் பேரவையை சிறப்பாக நடத்திட இரவு-பகல் பாராது தேனீக்களைப் போல பணியாற்றிய சேலம் மாவட்ட நிர்வாகிகளே... வட்ட நிர்வாகிகளே... வரவேற்புக் குழு நிர்வாகிகளே... மற்றும் முன்னணி ஊழியர்களே... தோழமை சங்க நிர்வாகிகளே... இறுதியாக நன்றியுரையாற்றவுள்ள வரவேற்புக் குழுவின் மதிப்புறுத் தலைவர் தோழர். வெ.அர்த்தனாரி அவர்களே... அனைவரையும் மாநில பிரதிநிதித்துவப் பேரவை வரவேற்புக்குழுவின் சார்பில் வருக... வருக... என அன்போடும் மகிழ்வோடும் வரவேற்கின்றோம். ●

## மாநில பிரதிநிதித்துவப் பேரவை

# அறைகூவல் தீர்மானங்கள்...

**பழைய ஓய்வூதியம், அகவிலைப்படி வரையறுக்கப்பட்ட ஊதியம், சரண்டர் போன்ற வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுக்க... அத்துக்கூலி கொத்தடிமை முறையை ஒழித்துக்கட்ட... ஓய்வறியாப் போராட்டங்களே தனி மொழி! களம் காண்போம்! பலம் காட்டுவோம்!!**

"நான் உங்களில் ஒருவன்.''

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன்." "நான் சொன்ன வாக்குறுதிகளை மறக்கவும் இல்லை, மறைக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. நிதிநிலைமை சரியாக அவற்றை நான் நிறைவேற்றுவேன்''.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டிலும் சரி, ஜாக்டோ ஜியோவின் வாழ்வாதார மாநாட்டிலும் சரி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு பேசியபோது சொன்ன வார்த்தைகளும் கொடுத்த உறுதிமொழிகளும்தான் இவை. அந்த வார்த்தைகளின் ஓசை இன்னமும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் காதுகளில் ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கும் நிலையில், 18.10.2022 ஆம் தேதி தமிழக அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை வெளியிட்டிருக்கும் அரசாணை நிலை எண்.115, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் வேலை வாய்ப்புக்காக பதிவு செய்துவிட்டு காத்திருக்கும் லட்சக்கணக்கான இளையதலைமுறையினரின் மனதில் குழப்பத்தையும், கொந்தளிப்பையும், கோபத்தையும் தூண்டியுள்ளது.

மேலும் இந்த மனிதவள சீரமைப்புக் குழுவின் நீட்சியாக பேரூராட்சிகளில் தெருவிளக்கு, குடி தண்ணீர், கழிவுநீர் அகற்றுதல், திட கழிவு மேலாண்மை போன்ற அடிப்படை பணிகளை செய்ய நிரந்தர அடிப்படையில் ஆட்களை எடுக்காமல், தனியார் ஏஜன்சிகள் மூலம் டெண்டர் விட்டு ஒப்பந்த முறையில் மக்களின் நலன் சார்ந்த அடிப்படை பணிகளை செய்திட அரசாணை எண்.139/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் விநியோகத் துறை நாள் 03.10.2022 ல் அரசு உத்தரவிட்டுள்ளது என அனைத்து நடவடிக்கைகளும் ஊழியர் விரோத நடவடிக்கைளாகவே உள்ளன. அரசின் பல்வேறு நிலைப் பணியிடங்கள் பதவிகள் பணிகள் போன்றவற்றை திறன் அடிப்படையில் ஒப்பந்த முறையில் நிரப்புதல், டி மற்றும் சி பிரிவு பணியிடங்களை வெளிமுகமை மூலம் நிரப்புவது, வெளிமுகமை ஆட்சேர்ப்பு நிறுவனங்களை பட்டியலிட்டு அவற்றிலிருந்து பல்வேறு மனிதவள அரசுப்பணியிடங்களை நிரப்புவது, உயர்நிலைப் பணியிடங்களை தனியார் நிறுவனங்களுடன் ஒப்பிட்டு அப்பணியிடங்களின் வேலைத்திறன் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை ஆராய்தல், பணியாளர்களை ஒப்பந்த முறையில் நியமித்து அவர்களின் பணிச்செயல்பாடுகளை ஆராய்ந்து அதன்பிறகு அவர்களை காலமுறை ஊதியத்தில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றவை முற்றிலும் அரசுத்துறைகளை வெளிமுகமை என்ற தனியார் மயத்திடம் கொண்டு சேர்க்கும் ஏற்பாடுகளே அன்றி வேறில்லை.

இந்த நடவடிக்கை தனியார்மயம், அரசுப்பணி செய்பவர்கள் முதற்கொண்டு விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் சாதாரண உழைக்கும் மக்கள் வரை தீவிரமாக கட்டவிழ்த்து விடப்படும் என்பதை தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது. அதிகார வெளிகளினூடே மக்கள் நலன்களையும், பண்பாடு கலாச்சார அடையாளங்களையும்

அழித்தொழித்துவிட்டு ஒற்றை பேரடையாளத்தை இந்த தனியார்மயம் பரிந்துரை செய்கிறது. இது மக்களாட்சியை ஏகபோக தனியார் மயத்திற்கு ஆட்படுத்தி மக்கள் நலன்கள், உரிமைகள் மறுக்கப்பட்டு

மக்களை அடிமைகளாகவும், விலங்குகளாகவும் ஆக்கிவிடும் பேராபத்தை கொண்டுள்ளதை தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் உற்று நோக்கி வருகிறது.

மேற்கண்ட அரசாணையில் நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தமிழக சட்டப்பேரவையில் ஆற்றிய உரையின் ஒரு பகுதியை அதாவது

"காலிப்பணியிடங்கள் அதிகளவில் உள்ள அதேவேளையில், சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் மிகவும் அதிகமாக உள்ள ஒரு இக்கட்டான சூழலில் நாம் உள்ளோம். அதனால் நடைமுறையில் உள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிக்கான முறைகளை சீரமைப்பது மிகவும் அவசிய மாகிறது. பணியமர்த்தல் மற்றும் பயிற்சிக்கான விதிகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ளும் பணியினை இவ்வாண்டு தொடங்கியுள்ளோம். மனிதவளம் தொடர்பான சீர்திருத்தங்கள் மேற் கொள்வதற்கான ஒருங்கிணைந்த திட்டத்தை ஆறுமாத கால அளவிற்குள் முன்மொழிவதற்கான மனிதவள சீர்திருத்தக்குழு ஒன்று அமைக்கப்படும்".

என்று கூறியுள்ளதை சுட்டிக்காட்டி ஐந்து பேர் அடங்கிய 'மனிதவள சீர்த்திருத்தக் குழு' அமைக்கப்பட்டுள்ளதாக அரசாணையில் கூறப்பட்டுள்ளது. நிதியமைச்சரின் சட்டப்பேரவை உரைக்கு அப்போதே தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் எதிர்ப்பு தெரிவித்து சந்தேகம் எழுப்பிய நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு பாதகம் ஏற்படும் வகையில் சீர்த்திருத்தங்கள் இருக்காது என்று வாய்மொழி விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் தமிழக முதல்வர் அவர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளை, கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்துள்ள நிலையில் நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சரின் உரை குறித்து கவலை கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இன்றோ மனிதவள சீரமைப்புக் குழு அமைக்கப்பட்டு அத்தக் கூலி முறையை உருவாக்கிவருகிறது.

இந்தக் குழுவின் பெயரிலேயே, இது மனிதவள 'மேம்பாட்டுக்' குழு இல்லை, மனிதவள 'சீரமைப்புக்' குழு என்று உணர்த்தப்பட்டுள்ளது. இது மனிதவளத்தை மேம்படுத்தப் போவதில்லை மாறாக சீரமைக்கவே ஏற்படுத் தப்பட்டுள்ளது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது. நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் தன்னுடைய சட்டப்பேரவை உரையில் 'நடைமுறையில் உள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிக்கான முறைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாகிறது' என தெரிவிப்பதற்கு முன்பாகவே இந்தக்குழு அமைக்கப்படாத நிலையிலேயே மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்தக்காரர்களை அமர்த்தும் நடவடிக்கை தொடங்கப்பட்டிருப்பது தற்போது தெரியவருகிறது.

அதாவது மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் அடிப்படை சேவைகளை திறம்பட செய்திட பணியாட்கள் போதுமானதாக இல்லாத நிலையில் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்த உத்தவிடப்பட்டுள்ளது.( நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/ 2021 / EA 2 நாள் 02.10.2021 ). இந்த சுற்றறிக்கையில் மாநகராட்சிகள் / நகராட்சிகளில் உள்ள சம்பந்தப்பட்ட வகை வாரியான நிரந்தரப் பணியாட்களின் இருப்பினை கருத்தில் கொண்டு அதற்கும் மேலும் பணியாட்கள் தேவைப்பட்டால் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை பணியமர்த்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதிலிருந்து, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் இனிமேல் நிரந்தப்பணிமுறை கைவிடப் பட்டுவிட்டது என்பது தெரிய வருகிறது. இதே நடைமுறைதான் இனி ஒவ்வொரு அரசுத்துறையிலும் நடைமுறைக்கு வரும் என்பதைத்தான் இந்த 'சீரமைப்பு' குழு அமைக்கப்பட்டுள்ளதன் நோக்கம் அனைவருக்கும் சுட்டிக்காட்டும் சூசகத் தகவலாகும்.

தமிழகத்தில் நிலவும் சூழ்நிலை "மக்கள் நலன்" என்ற வார்த்தைகளை "அழிந்து போன இனங்கள்" பட்டியலில் சேர்ப்பதற்கான

நடவடிக்கையின் உச்சகட்டமாக மாறியிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர் மக்கள் நலத்திட்டங்கள் அனைத்துக்கும் மூடுவிழா நடத்த துணிந்துவிட்டாரோ என்ற எண்ணம்தான் வருகிறது. சமூக நீதியைக் காக்க கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இன்று காணாமல் போகின்ற நிலையில் இருக்கின்றன. அவ்வப்போது வரும் அறிவிப்புகளும் அறிக்கைகளும் அரசு நிர்வாகத்தில் 'முதல்வரின் இதயம்' என்ற ஏழை எளிய மக்களுக்கான சலுகைகள் கழற்றப்பட்டுவிட்டு அந்த இடத்தில் 'அதிகார வர்க்கத்தின் மூளை' பொருத்தப்பட்டுள்ளதையே காட்டுகிறது.

அரசாங்க வேலையில் சேர்பவர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் என்பது அவர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியமாகத்தான் இருக்கும் என்பதிலிருந்து தொடங்கி இன்று அரசுத்துறைகளையே தனியார்வசம்

ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசு நிர்வாகம் வந்திருக்கிறது. இதன்விளைவுகள் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத சமூகப் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி ஆட்சியாளர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அரசு நிர்வாகத்தை ஏழை எளிய மக்களுக்குரிய பாதுகாப்புடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் பாதிக்காத வகையில் நிர்வகிக்க தனியார் மயங்களும், அவுட் சோர்சிங் முறைகளும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளும் ஒருபோதும் உதவாது என்று தெரிந்தும் அதைப்பற்றி கவலைப்படாமல் கண்மூடிக்கொண்டிருப்பது சமூக அக்கறையும், மக்களுக்கான அரசாங்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நடுநிலைவாதிகளையும் அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது.

அரசாங்க வேலைக்கு ஆள் எடுக்காமல் விடுதல், நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி மக்களின் சேவைக்கு தேவையான அடிப்படை பணியாளர்களுக்கான காலிப்பணியிடங்களை நிரப்பாமை, புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது, தேவைப்படும் இடங்களில் தற்காலிகப் பணியாளர்களை நியமித்துக் கொள்ளுதல், வேலை முடிந்ததும் அவர்களை விரட்டிவிடுதல், ஒப்பந்த முறையில் பணியாளர்களை அமர்த்துதல், அவுட்சோர்சிங் முறையில் ஊழியர்களை நியமித்தல் போன்ற பலகட்ட வடிகட்டலுக்குப்பின்னர் தமிழக அரசு பெரும்பான்மையான துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் முடிவுக்கு வந்துள்ளதையே இந்த அரசாணைகள் உணர்த்துகிறது.

அரசாணை எண்.115, 139, 152 மற்றும் இன்னும் வெளிவராத பல ஆணைகள், அரசுப்பணிகளை முற்றிலுமாக ஒழித்துக்கட்ட சாணை தீட்டப்படும் கத்தி என்றும் இதனால் மக்கள் நலன் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் அச்சம் எழுந்துள்ளது. மக்கள் நலனில் அக்கறையுள்ள அரசு இந்த அரசாணைகளை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறது.

சமூக அக்கறை உள்ளவர்களும், மக்கள் நலத்திட்டங்களை மதிப்பவர்களும் இதுபோன்ற ஆட்குறைப்பு துறை ஒழிப்பு நடவடிக்கைகளால் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் மக்கள் நலன் சார்ந்த துறைகளும் திட்டங்களும் அரசின்வசமே இருக்க வேண்டும் என்றும் அரசு வேலை வாய்ப்புக்களை நம்பியுள்ள இளைஞர்களின் எதிர்காலம் இருளடைந்துவிடும் என்றும் அரசாங்கத்திற்கு சுட்டிக்காட்டியும் அரசோ எதைப்பற்றியும் கவலைப்படாமல் அடுத்தடுத்த நகர்வுகளில் கவனம் காட்டி வருவது அரசு ஊழியர் ஆசிரியர் மற்றும் சமூக அக்கறையுள்ளவர்களிடையே மிகுந்த மனவேதனையையும், கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்களுக்கு நல்லது செய்வதாக கூறிக்கொண்டு பல மக்கள்நலன் சார்ந்த திட்டங்களை நிறுத்தி விடுவது என்பது மக்களுக்கு எதிராக... மாணவர்களுக்கு எதிராக... இளைஞர்களுக்கு எதிராக... அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எதிராக... அரசாங்கத்தின் நடவடிக்கைகள் உள்ளன என்பதை தோலுரித்துக்காட்டி வருகின்றன. சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் மக்கள் நலனை சூறையாடப் பார்க்கும் அதிகார வர்க்கத்தினருக்கும்,

அரசியல் வாதிகளுக்கும், "மக்கள் நலன்" என்ற வார்த்தையின் மகத்துவம் புரியவில்லை என்பதுதான் இதன் உள்ளார்ந்த அர்த்தம் இத்தகைய அரசாணைகளும் உத்தரவுகளும் ஜனநாயகம் என்ற நிரபராதியின் குரல்வளையை இறுக்கும் சர்வாதிகார கயிறுகளாகும்.


ஏற்கெனவே அரசுத்துறைகளில் காலியாக உள்ள 50 சதவீதத்திற்கும் மேலான 'டி' பிரிவு பணியிடங்கள் நிரப்பப்படாமல் கைவிடப் பட்டுள்ள நிலையில் தற்போதைய அரசாணையில் 'சி' பிரிவு பணியிடங்களையும் தனியாருக்கு தாரைவார்க்கப்படுவதற்கான முகாந்திரங்கள் தெளிவாக்கப்பட்டுள்ளன. சத்துணவு திட்டத்தில் காலை சிற்றுண்டி தனியார் வசம் ஒப்படைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் சத்துணவு திட்டத்தை தனியார்வசம் தந்துவிட்டு சத்துணவு ஊழியர் பணியிடங்களை ஒழித்துக்கட்டும் முடிவாகவே பார்க்க வேண்டியுள்ளது. மேலும் அரசுத்துறைகளில் காலியாக விடப்பட்டுள்ள பணியிடங்கள் 5 லட்சத்தை நெருங்கியுள்ள நிலையில் இப்போது வெளியிடப்பட்டிருக்கும் அரசாணைகள் அரசுப்பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, அவற்றை தனியார் மயமாக்குவதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதில் ஐயமில்லை.

வேலையின்மையும், வறுமையும் இங்கு வாழும் மக்களை சொந்தநாட்டிலேயே அகதிகளாக்கிவிடும் என்பதை ஆட்சி செய்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வேலை தேடி கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு செல்பவர்களைப்பற்றிய எந்த தகவல்களும் அரசாங்கத்தால் பதிவு செயய்யப்படுவதில்லை. இத்தகைய நாடோடி வாழ்க்கைக்கு உந்தப்பட்டவர்களுக்கு வாக்குரிமை, குடும்ப அட்டை, இவர்களின் குழந்தைகளுக்கு கல்வி உரிமை, மருத்துவமனையில் சிகிச்சை பெற காப்பீடு வசதி எதுவும் கிடையாது. அரசாங்கம் வகுத்துள்ள குறைந்தபட்ச ஊதியம், கண்ணியமான வாழ்க்கைக்குரிய உத்தரவாதம் பணிக்கொடை, தொழிலாளர் காப்புறுதி சட்ட பாதுகாப்பு போன்றவைகூட இந்த தனியார்மயத்தால் அவுட்சோர்சிங் முறையால் ஒழிக்கப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை. வருங்கால இளைஞர்களை கொத்தடிமைகளாக, அரசாங்கங்களே மாற்றுவதற்கான ஏற்பாடே அரசுத்துறைகளில் அவுட்சோர்சிங் முறைகளை புகுத்துவதும் அரசுத்துறைகளை தனியார் வசம் ஒப்படைப்பதுவும் ஆகும். இது இந்த நாட்டின் படித்த இளைஞர்களை சொந்த நாட்டிலேயே அடிமைகளாகவும் அகதிகளாகவும் மாற்றும் சூழலை ஏற்படுத்தி விடும் அபாயம் உள்ளது என்பதை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எச்சரிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறது.

ஒரு அரசாங்கம் தன்னுடைய ஊழியர்களுக்கு வழங்கும் சம்பளம் மற்றும் ஓய்வூதியச் செலவினங்கள் அதிகமாக இருப்பதால் அதை தனியார் வசம் ஒப்படைத்து விட முற்படுவது மிகவும் துரதிருஷ்டமானதாகும். அரசாங்கம், அதுவும் ஒரு மக்கள் நல அரசாங்கம் என்பது லாப நட்ட கணக்குகளை பார்க்கும் இடம் அரசு ஊழியர்கள் அதிகாரிகள் பணிபுரியும் இடங்கள் அல்ல. அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளங்களையும், படிகளையும், ஓய்வூதியங்களையும் குறைப்பது என்ற ஆபத்தான போக்கிலிருந்து விலகி தற்போது அவற்றை முற்றாக ஒழித்து விட்டு தனியார்வசம் குறைந்தவிலைக்கு அரசாங்கத்தை விற்றுவிட தீர்மானித்திருப்பதுதான் அரசாணைகள் எண்.115, 139, 152-ன் நோக்கமாகும்.

ஒருபுறம் சமூக நீதி, மக்கள் நலன், ஊழியர் நலனில் அக்கறை, பழைய ஓய்வுதியத்தை மீண்டும் அமல்படுத்துதல் போன்ற வாக்குறுதிகளை மக்களுக்கும் அரசு ஊழியர்களுக்கும் அளித்துவிட்டு மறுபுறம் அரசாங்கத்தை கார்ப்பரேட் மயமாக்குவதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதற்கான கருவிகளாகவே அரசாணை எண்.115, 139 மற்றும் அரசாணை எண்.152ஐ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பார்க்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த 'சீரமைப்பு' 'மனிதவளம்' போன்ற வார்த்தைகளை தவிர்த்து அரசாணைகளின் சில பகுதிகளை மட்டுமல்ல அரசாணைகளையே முற்றிலும் ரத்து செய்து உத்தரவிடுவதுதான் 'திராவிட மாடல் ஆட்சி'க்கு அர்த்தமுள்ளதாக இருக்கும்.

**கொரோனா பரவுகிறது. பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் – தமிழக அரசு**



”அய்யா…லாக் டவுன் வேணாகூட போட்டுக்கங்க, தயவு செஞ்சு அந்த காலர் டியூனை மட்டும் போட்டுடாதீங்கய்யா…”

தமிழக முதல்வர் அவர்கள் காலை சிற்றுண்டியை பரீட்சார்த்த முறையில் குறிப்பிட்ட சில இடங்களில் அமல்படுத்தியுள்ளது பெரிய வரவேற்பை பெற்றுள்ள நிலையில் அவற்றை தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது. மேலும் மேற்படி திட்டத்தை வெளிமுகமை மூலமாக செயல்படுத்துவதை தவிர்த்து அதை சத்துணவு ஊழியர்களைக் கொண்டே நடத்துவதற்கான அரசாணையை வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

நிதி செலவினம் இல்லாத சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக வரையறுத்தல் மற்றும் கருவூலம் மூலம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கிடுதல், சத்துணவு, அங்கன்வாடி உள்ளிட்ட பிரிவினருக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம் வழங்கிடுதல் போன்ற சில கோரிக்கைகளில் கூட முதல்வர் மனம் செலுத்தாமல் மௌனமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் இதுபோன்ற அவுட்சோர்சிங் பணியிடங்களை ஏற்படுத்துவதில் முனைப்பாக உள்ளது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் மிகப்பெரிய மனக்குமுறல்களை ஏற்படுத்தியுள்ளது. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அகவிலைப்படி, சரண்டர் உள்ளிட்ட வாழ்வாதார பழைய ஓய்வூதியம் போன்றவற்றை கொரோனா காலத்திற்குப் பிறகும் தொடர்ச்சியாக நிறுத்தி வைத்திருப்பது போன்ற நடவடிக்கைகள் திராவிட மாடல் ஆட்சியின் சமூக நீதிக் கொள்கைகளுக்கு எந்தவிதத்திலும் ஏற்புடையதாக இருக்காது.

எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் அரசாணை எண்.115, 139 மற்றும் 152 ஆகியவற்றை உடனடியாக முற்றிலும் ரத்து செய்வதோடு, சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணிக்காலமாக வரையறுத்திடவும், சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், எம்.ஆர்.பி செவிலியர்கள் உள்ளிட்ட பிரிவினருக்கு காலமுறை ஊதியம், ஓய்வூதியம் வழங்கிடவும், மற்றும் அகவிலைப்படி, சரண்டர் உள்ளிட்ட வாழ்வாதார பழைய ஓய்வூதியம் வழங்கிடவும் அரசாணைகள் வெளியிட்டுஅரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நீண்டநாள் கோரிக்கை களை நிறைவேற்றிட வேண்டுமெனவும் அகவிலைப்படி மற்றும் சரண்விடுப்புக்கான ஊதியத்தை பணமாக பெற்றுக்கொள்ளும் உரிமைக்கான அறிவிப்பினை இனியும் தாமதிக்காமல் உடனடியாக செயல்படுத்திட இம்மாநில பிரதிநிதித்துவப் பேரவை தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது. உலகின் எந்த உழைக்கும் வர்க்கமும் அதன் உரிமைகளை இலகுவாக பெற்றுவிட்டதாகவோ அல்லது எந்த முதலாளித்துவமோ / அரசாங்கமோ உழைக்கும் வர்க்கத்தின் நிலை உணர்ந்து அவற்றின் உரிமைகளை தாராள மனதுடன் தந்து விட்டதாகவோ எந்த வரலாறும் இல்லை.

இதனடிப்படையில் நம் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட, சமூக அநீதியை அகற்றி சமூக நீதியை நிலை நாட்டிட பின்வரும் உரிமை மீட்பு இயக்கத்தில் பங்கேற்க இம்மாநில பிரதிநிதித்துவப் பேரவை அனைவரையும் அறைகூவலிட்டு அழைக்கிறது!! ●

# போராட்ட அறைகூவல்



## பழைய ஓய்வூதியம், அகவிலைப்படி வரையறுக்கப்பட்ட ஊதியம், சரண்டர் போன்ற வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுக்க... அத்துக்கூலி கொத்தடிமை முறையை ஒழித்துக்கட்ட...

# கோட்டை முற்றுகை

**மாநிலம் தழுவிய அனைத்து அலுவலகங்கள் முன்பு மாபெரும் ஆர்ப்பாட்டம்**

நமது வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி 27.12.2022 அன்று தமிழகம் முழுவதும் அனைத்து அலுவலகங்கள் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்திடுவது.

**ஊழியர் சந்திப்பும், உறுப்பினர் சேர்க்கை இயக்கமும்**

இப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட நமது கோரிக்கைகளை ஊழியர்கள் மத்தியில் கொண்டு சென்றிடவும், நமது ஸ்தாபன கடமையான உறுப்பினர் சந்திப்பு இயக்கத்தை எழுச்சியோடு துவக்கிடவும் அனைத்து வட்ட, மாவட்ட மையங்களில் வட்ட, மாவட்ட, மாநில நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் 09.01.2023 முதல் 27.01.2023 வரை ஊழியர் சந்திப்பு மற்றும் உறுப்பினர் சேர்ப்பு இயக்கத்தை எழுச்சிகரமாக நடத்திடுவது.

**மாவட்ட அளவிலான கோரிக்கைப் பேரணி**

நமது வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி 10.02.2023 அன்று மாவட்ட அளவிலான பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்றிடும் வகையிலான கோரிக்கைப்பேரணியை நடத்திடுவது.

**ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம்**

நமது வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்தி, பறிக்கப்பட்ட உரிமைகளை மீளப்பெற்றிட ஒன்றுபட்ட நமது கோரிக்கையின் வலிமையை தமிழக அரசுக்கு வலியுறுத்தும் வகையில் 28.03.2023 அன்று இலட்சக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்கும் வகையில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை நடத்திடுவது.

**கோட்டை முற்றுகை**

நமது வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்றிட அரசு தவறும் பட்சத்தில் தமிழக அரசிடம் நியாயம் கேட்டு வரும் பட்ஜெட் கூட்டத்தொடரின்போது கோட்டையை முற்றுகையிடுவது.

மேற்கண்ட வாழ்வாதார கோரிக்கைகளை மீட்டெடுக்கும் போராட்ட நடவடிக்கைகளை தமிழகத்தில் உள்ள அனைத்து துறைவாரி / பிரிவுவாரி ஊழியர்களும் திரளாக பங்கேற்று உரிமை மீட்பு போராட்டத்தை நடத்தி நமது இழந்த உரிமைகளை மீட்டிடவும், இருப்பதை காத்திடவும் அணிதிரள இம்மாநில பிரதிநிதித்துவப்பேரவை அனைவரையும் அறைகூவி அழைக்கின்றது.

●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண்: 237 /84)
தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்,
எண்: 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5
தொலைபேசி: 288441286 / 28440938 / 28443601 E-mail: tngeastatecenter@gmail.com / web : www.tngea.org

மாநிலத் தலைவர்
மு.அன்பரசு

பொதுச் செயலாளர்
ஆ.செல்வம்

மாநில துணைத் தலைவர்கள்
மொ.ஞானத்தம்பி
ஆ.பெரியசாமி
கோ.பழனியம்மாள்
சி.எஸ்.கிறிஸ்டோபர்
சி.பரமேஸ்வரி
மு.செல்வராணி

மாநிலப் பொருளாளர்
மு.பாஸ்கரன்

துணை பொதுச்செயலாளர்கள்
இரா.மங்களபாண்டியன்
என்.வெங்கடேசன்
மு.சீனிவாசன்
தெ.வாசுகி

மாநிலச் செயலாளர்கள்
சா.டானியல் ஜெயசிங்
உ.சுமதி
ச.ஹேமலதா
ஆ.அம்சராஜ்
சா.கோதண்டபாணி
அ.குபேரன்



**நாம் எதைத் தேடிக்கொண்டிருக்கிறோமோ,**
**அது நம்மை தேடிக்கொண்டிருக்கிறது!**

ஓய்வூதியம், சரண்டர்,
ஊதிய முரண்பாடு, டிஏ,
காலிப்பணியிடங்கள்,
காலமுறை ஊதியம் என
வாழ்வாதார கோரிக்கைகள்
வகைவகையாய் அணிவகுக்க,,,

ஆட்குறைப்பு அவதானங்களும்,
அவுட்சோர்சிங் அரசாணைகளும்,
தேர்தல் வாக்குறுதிகளையும்,
தீவுத்திடல் உறுதிமொழிகளையும்
சிம்மாசனத்தின் காலடிகளில்
சின்னாபின்னமாக்கி
சிதைத்திருக்க...

இன்னொரு போர்க்களத்தை
தன்னிச்சையாக உருவாக்கி
ஆயுதங்களை கைகளில்
திணிக்கின்ற ஏற்பாட்டை
அட்சரம் பிசகாமல் செய்கிறது
அதிகார வர்க்கம்!

முடிந்தவரை
பொறுமை கொள்வதும்,
முடியாதபட்சத்தில்
துணிந்து செல்வதும்,
அவமானப்படும்போது
அவதாரம் எடுப்பதும்,
வீழ்கின்ற போது
விஸ்வரூபம் படைப்பதும்,
அரசு ஊழியர்களின் இயல்பே!

கடலும் வானும்
ஒன்றிக் கலந்தது போல்
விரிகின்ற புதிய வானம்
நீலமும் சிவப்புமாய் -
பிரபஞ்சம் முழுவதும்
பறக்கிறது நம்கொடி.

தொப்புள்கொடி உறவுகளும்,
தோழமைச் சிறகுகளும்,
ஒன்றிணைந்து செய்வோம்
சமூகநீதி, சாதி மத நல்லிணக்கம்
இட ஒதுக்கீட்டுக் கொள்கை மற்றும்
ஊழியர் உரிமை மீட்புக்கான
புத்தாண்டின் புதிய விதிகளை!




(மு. அன்பரசு)
மாநிலத் தலைவர்
செல்.9840187508

(ஆ. செல்வம்)
பொதுச் செயலாளர்
செல்.9443930500

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com